வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

அங்காடி விளம்பர சிறப்பிதழ் உள்ளே

மழைக்கான சாத்தியம் உண்டு.
27.°C 26.°C

பக்கம் 52 | சுடர்: 28 | கதிர்: 341 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 17, ஞாயிறு 03.11.2013

## இசைப்பிரியாவின் காணொலியால் தமிழகம் கொதிப்பு


### சர்வதேச விசாரணை வேண்டும் என்கிறார் மத்திய அமைச்சர் சிதம்பரம்

கொழும்பு, நவ. 3
இசைப்பிரியா உயிருடன் இலங்கை இராணுவத் தினரால் பிடிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட காணொலியை சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்டதை அடுத்துத் தமிழகத்தில் அது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.
இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், இது மிக மோசமான மனித உரிமை மீறல் என்று சாடியுள்ளார்.
இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட் டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்ளக் கூடாதெனத் தமிழக சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது மட்டுமல்லாமல் அங்கு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில் தமிழீழத் தேசிய தொலைக்காட்சியின் செய்திவாசிப்பாளரான இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பிலான புதிய போர்க்குற்ற ஆதாரத்தை சனல் - 4 வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
"இலங்கை அரசு சர்வதேச மனிதாபிமான மனித உரிமைச் சட்டங்களை மீறியுள்ளது. இதற்கான போதிய ஆதாரம் உள்ளது. எனவே இலங்கை அரசு விசாரணை 17

# மஹிந்தவின் பணிப்பையும் மீறி நேற்றும் வீடுகள் இடித்தழிப்பு

### நேரில் சென்று உறுதி செய்தார் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர்

யாழ்ப்பாணம், நவம்பர் 3
வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள தமிழ் மக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுவதை உடனடியாக நிறுத்துமாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ விடுத்த உத்தரவையும் மீறி நேற்று சனிக்கிழமையும் அங்கு வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
இதனை வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் நேற்று நேரில் சென்று உறுதிப்படுத்தினார்.
வீடுகள் அழிப்பதை நிறுத்துமாறு எங்களுக்கு எந்த அறிவிப்பும் கிடைக்கவில்லை. இது அரசுடமையாக்கப்பட்டுள்ள பகுதி. இங்கு நாங்கள் எது வேண்டுமானாலும் செய்வோம். நீங்கள் உங்களால்



முடிந்ததைச் செய்யுங்கள். சட்ட நடவடிக்கை எடுப்பதென்றாலும் எடுங்கள் என்று வலி.வடக்கில் வீடழிப்பை மேற்கொண்டு வரும் இராணுவ மேஜர் தன்னிடம் கூறியதாக வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.
வலி.வடக்கில் கடந்த சில தினங்களாக, உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளுக்குள் உள்ள வீடுகளை இடித்தழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இரு தினங்களுக்கு முன்னர் தொலைபேசியில் உரையாடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலி.வடக்கு வீடழிப்பு நடவடிக்கையை உடனடியாக நிறுத்த 17

## வேறுவழியைத் தான் நாம் பார்க்க வேண்டும்

### வீடழிப்புக் குறித்து சம்பந்தன்

கொழும்பு, நவ. 3
"வலி.வடக்கு வீடழிப்பு விவகாரம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு அதனை நிறுத்துமாறு அவர் உத்தரவிட்ட பின்னரும் அது தொடர்கிறது. இதனால் நாம் வேறு வழியைத் தான் பார்க்க வேண்டும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரும் நாடாளுமன்ற 17

## 'சனல் - 4' காணொலி ஆராயப்படவேண்டும்

### போரை வழிநடத்திய பொன்சேகா கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 3
இசைப்பிரியா உயிருடன், இலங்கை இராணுவத்தால் பிடிக்கப்பட்டு கோரமாகக் கொல்லப்பட்டுள்ளமை தொடர்பில் 'சனல் - 4' வெளியிட்டுள்ள காணொலி தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று போரை வழிநடத்திய இராணுவத் தளபதி ஜெனரல் பொன்சேகா தெரி 17

## போரை நடத்தியோரும், ஆதரவளித்தோருமே இசைப்பிரியாவின் படுகொலைக்குப் பொறுப்பு

### அடித்துக் கூறுகிறார் மனோ கணேசன்

கொழும்பு, நவ. 3
போரை நடத்தியவர்களும், போரை நடத்துவதற்கு ஆதரவு கொடுத்தவர்களுமே இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பில் தமிழ்



மக்களுக்கும் சர்வதே சத்துக்கும் பொறுப்புடன் பதிலளித்தேயாக வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ 17

## ஆரவாரம் குறைந்த தீபாவளி

யாழ்ப்பாணம், நவ. 3
வடக்கில் நேற்று தீபாவளிக் கொண்டாட்டங்கள் ஆர வாரமின்றி முடிவடைந்தன. இந்துக்களின் தீபத் திருநாளான 17

## சுயாதீன விசாரணை கோருகிறது பிரிட்டன்

### இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில்

லண்டன், நவ.03
போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது. 17



## காணிகளை அபகரிக்கவும் செயலமர்வு

கொழும்பு, நவ. 3
வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காணி சுவீகரிப்பை மேற்கொள்வதில் முனைப்பாகவுள்ள அரசு, இதற்காக விசேட செயலமர்வு ஒன்றைப் பிரதேச செயலர்களுக்கும் காணி அலுவலர்களுக்கும் ஒழுங்கு செய்துள்ளது.
அனுராதபுரத்தில் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு - கிழக்கில் இராணுவத்தினருக்குத் தேவையான காணிகளைச் சுவீகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்தி 17

அசல் லுமாலா (LUMALA) துவிச்சக்கர வண்டிகள் சிங்கர் இடம் இருந்து மட்டுமே



சிங்கர்
காட்சி அறைகள்



யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, சங்கானை.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | 021 222 5408 | Chunnakam | 021 224 0555 | Manipay | 021 225 5343 | Nelliady | 021 226 4937 | Point Pedro | 021 226 3411 |
| Chavakachcheri | 021 227 0197 | Kodikamam | 077 643 3888 | Kilinochchi | 021 228 0199 | Mullaitivu | 021 229 0180 | Chankanai | 021225 1100 |

C/13490(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளியை பார்க்க அனுமதிமறுத்த பாதுகாப்பு ஊழியர்

## கணவனின் சடலத்தையே பார்க்க முடிந்தது என மனைவி கதறல்

யாழ்ப்பாணம் நவ.03

தலையில் பொல்லினால் தாக்கப்பட்டதால் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்தார்.

படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை அவரை உயிருடன் பார்வையிட முல்லைத்தீவில் இருந்து வந்திருந்த அவரது மனைவி, பிள்ளைகளை போதனா வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்கள் தடுத்து திருப்பி அனுப்பி விட்டனர்.

"அவரை உயிருடன் பார்க்க வேண்டும் என்று மன்றாடி அவர்களின் கால்களில் விழுந்து அழுதோம். அவர்கள் அனுமதி தரவில்லை. அவர் உயிரிழந்த பின்னர் சடலத்தைப் பார்வையிடவே பாதுகாப்பு ஊழியர்கள் அனுமதித்தனர்" என்று உயிழந்தவரின் தாயார் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் வடக்கைச் சேர்ந்த பி.குமார் (வயது - 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் தனது சகோதரனின் வீட்டுக்குச் சென்றிருந்தார். அங்கு அயல் வீட்டுக் குடும்பஸ்தர் சகோதரனின் மனைவியுடன் முரண்பட்டு அவரை பொல்லால் தாக்க முற்பட்டுள்ளார். இதனைத் தடுத்துவிட்டுத் திரும்பிவரும்போது அதே நபரால் தலையில் தாக்கப்பட்டார் குமார்.

அந்த இடத்திலேயே குமார் மூச்சையடைந்து விழுந்தார். அவரைதாக்கியவர் உடனடியாக குமாரை மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவரது குடும்பம் மிகவும் வறுமையானது என்பதனால் அவரது மனைவி அங்குள்ள பாடசாலை ஒன்றில் சமையல் வேலை செய்து வருகிறார். குமார் தாக்குதலுக்கு உள்ளாகிய விடயம் மறுநாள் பிற்பகலே மனைவிக்கு தெரியவந்தது.

அதனால் கடந்த புதன்கிழமை தனது பிள்ளைகளையும் மாமியாரையும் அழைத்துக் கொண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்தார்.

இதன்போது பாதுகாப்பு ஊழியர்கள் அவர்களை விடுதிக்கு செல்லவிடாமல் தடுத்துவிட்டனர். குமார் எத்தனையாம் இலக்க விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளார் என்பது பற்றிய தகவல்கள் தெரியாத நிலையிலேயே மனைவி அவரது பெயரைக் கூறி ஆபத்தான நிலையில் உள்ள அவரை பார்வையிட அனுமதிக்குமாறு கோரினார்.

'பாதுகாப்பு ஊழியரின் காலில் விழுந்தும் கெஞ்சினேன். ஆனால் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. மணிக் கணக்கில் நின்று காத்திருந்துவிட்டு முல்லைத்தீவுக்கு திரும்பிச் சென்றுவிட்டோம். மறுநாள் வியாழக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும்போது அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னரே எம்மை உள்ளே செல்ல பாதுகாப்பு ஊழியர்கள் அனுமதித்தனர். முதல் நாளே உள்ளே அனுமதித்திருந்தால் உயிருடன் அவரைப் பார்த்திருக்கலாம்' என்று கூறி கதறி அழுதார் மனைவி.

வைத்தியசாலையில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். பாதுகாப்பு ஊழியர்களால் குடும்பத்தினர் தடுக்கப்பட்ட விடயம் பின்னரே பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாதுகாப்பு ஊழியர்கள் அவ்வாறு நடந்துகொண்டமை தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதிராஜாவுடன் தொடர்புகொண்டுகேட்டபோது, இது தொடர்பில் எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இது குறித்து நான் விசாரிக்கிறேன் - என்றார். (த-4)

# யாழ். போதனா வைத்தியசாலையில் ஓடுகளை எடுத்துச் சென்ற ராணுவம்

யாழ்ப்பாணம் நவ.03

யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த ஓடுகளை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் முற்பகல்எடுத்துச்சென்றனர்.

வைத்தியசாலைவெளிநோயாளர்பிரிவு கட்டடத்தின் ஓடுகள் அண்மையில் இறக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக 'சீற்'றுகள் பொருத் தப்பட்டன.

அவ்வாறு கீழே இறக்கப்பட்டு வைத்தியசாலையின் பிரதான வாயிலின் உள்ளே அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஓடுகளை இராணுவத்தினர் தமது வாகனத்தில் ஏற்றிச்சென்றனர்.

இது தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜாவுடன் தொடர்புகொண்டுகேட்டபோது, அரசு விதிமுறைகளின்படி வைத்தியசாலைகளில் இருந்து இலவசமாக ஓடுகளை இராணுவத்துக்கு வழங்க முடியும். ஒரு அரச திணைக்களத்தில் இருந்து அதே அரசின் மற்றொரு பிரிவுக்கு அவ்வாறு இலவசமாக வழங்க முடியும். அவற்றைத் தருமாறு வேறு எந்தத் திணைக்களத்தினரும் எம்மிடம் கோரியிருக்கவில்லை. இராணுவத்தினர் அவற்றைத் தருமாறு கோரியிருந்தனர். அதன் அடிப்படையில் அவர்களுக்கு அது வழங்கப்பட்டது- என்றார். (த-5)

# இராணுவ வாகனம் மோதியதில் காயமுற்றவர் மயக்க நிலையில்

## ஒன்றரை மாதமாக வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம் நவ.03

இராணுவ வாகனம் மோதி விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் ஒன்றரை மாதங்களுக்கு மேலாக ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

முல்லைத்தீவு உடையார் கட்டு பகுதியைச் சேர்ந்த சுந்தரம் ஜெகநாதன் (வயது -40) என்பவரே இவ்வாறு சிகிச்சை பெறுகிறார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

மேசன் வேலை செய்யும் இவர் தனது வீட்டுத் தேவைக் காகப் பொருள்களை வாங்குவதற்காக 6 பேருடன் ஓட்டோவில் பயணித்துள்ளார். இதன்போது ஓட்டோவுக்கு பின்னால் இராணுவத்தினரின் வாகனம் சென்றுள்ளது. ஓட்டோ வீதியை கடக்க முற்பட்ட வேளை ஓட்டோவின் பின் இருக்கையில் இருந்து பயணித்த ஜெகநாதன் வலது கையால் சைகை காட்டியுள்ளார். இதன்போது இராணுவத்தினரின் வாகனம் அவரது கையில் மோதியதால் அவர் தூக்கி வீசப்பட்டார். அதனால் அவரது தலை, கை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டன அவரை ஓட்டோவில் பயணித்த ஏனைய வர்களால் அவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து இடம்பெற்று ஒன்றரை மாதங்கள் கடந்துள்ள போதும் அவர் இன்னும் மயக்க நிலையில் ஆபத்தான கட்டத்திலேயே உள்ளார்.

இந்த வித்துத் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-4)

# காணி சுவீகரிப்பு அலுவலராக வந்த புதியவரும் விலகினார்

யாழ்ப்பாணம், நவ.03

காணி சுவீகரிப்பு அலுவலராக புதிதாக நியமிக்கப்பட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு. கருணாநிதி கடமையைப் பொறுப்பெடுக்காமலேயே அந்தப் பதவியிலிருந்து விலகுவதாகக் காணி அமைச்சின் செயலருக்கு அறிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கு தேவையான காணிகளை சுவீகரித்துக் கொடுப்பதற்காக, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் வடக்கு - கிழக்கின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் அலுவலகங்கள் திறக்கப்பட்டன.

கடந்த மார்ச் மாதம் திறக்கப்பட்ட இந்த அலுவலகங்கள் ஊடாக இராணுவத்தினருக்குத் தேவையான காணிகள் சுவீகரிக்கும் அறிவுறுத்தல்கள் ஒட்டப்பட்டன.

இந்த நிலையில் யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலராக நியமிக்கப்பட்ட முன்னாள் பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி கடந்த ஏப்பரல் மாதம் 20 ஆம் திகதிதனது பதவியில் இருந்து விலகினார்.

அதன் பின்னர் குறித்த பதவிக்கு யாரும் விண்ணப்பிக்காத நிலையில், காணி சுவீக்ரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்தன.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிந்த பின்னர், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுக்கும் பொருட்டு யாழ். மாவட்டக் காணி சுவீகரிப்பு அலுவலராக முன்னாள் உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ. சு. கருணாநிதி நியமிக்கப்பட்டார்.

அவருக்கான நியமனக் கடிதம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டிருந்தது.

அந்தப் பதவியை இன்னமும் ஏற்காத அவர் மேற்படி பதவி பிரச்சினைக்குரியதொன்று என்பதால் தான் அதிலிருந்து விலகுவாதாக அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார். (த-5)

# அரசுக்கு எதிராக போராட ஹெல உறுமய முடிவு

## கஸினோ விவகாரத்தில் கடும் சீற்றம்

சர்ச்சைக்குரிய கஸினோ சூதாட்டத்தை ஊக்குவிக்கும் சட்ட வரைவை திருத்தங்களுடன் மீளக் கொண்டு வரு வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வரும் இந்நிலையில், அதற்கெதிராக போராடுவதற்கு அரசின் பங்காளியான ஜாதிக ஹெல உறுமய தீர்மானித் துள்ளது.

அரசின் இந்த முயற்சியை முறியடிப்பதற்காக அனைத்து அமைச்சர்களுடனும் பேச்சு நடத்தப் போவதாகவும் அக்கட்சியின் தலைவர் வண. ஓமால்பே சோபித தேரர் நேற்று தெரி வித்தார்.

"கஸினோ சட்டமூலத்தை நடை முறைப் படுத்தினால் நிச்சயமாக நாட் டில் பாதாள உலகம் உருவாகும்" எனவும் அவர் எதிர்வு கூறினார்.

அரசினால் நாடாளுமன்றுக்கு கொண்டு வரப்பட்ட கஸினோ சட்ட வரைபுக்கு பௌத்த மதத் தலைவர்களும், சிவில் அமைப்புகளும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தமையால் அரசு இத்திட்டத்தைப் பிற் போட்டது.

ஆனால், கஸினோ சூதாட்ட மன்னனான ஜேம்ஸ் பக்கர், "கஸினோவை அமைக்கும் யோசனையை அரசு இன்னும் கைவிட வில்லை. இது கொழும்பில் மிக விரைவில் அமைக் கப்படும்" என உறுதியாகத் தெரிவித்த கருத்திற்கே ஓமால்பே சோபித தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவித்ததாவது -

"கஸினோ சூதாட்ட நிலையம் என் பது நாட்டிற்கே சாபக்கோடான ஒன் றாகும். கஸினோவை நிறுவிவிட்டால் சூது, போதைப்பொருள் மற்றும் விப சாரம் என்பன வெளிப்படையாகவும், தைரியமாகவும் இனி நடைபெற ஆரம் பித்து விடும்.

அதுமட்டுமல்லாது, பாதாள உலகமும் உருவாகக் கூடிய அபாயம் காணப் படுகின்றதோடு ஆயுதப் புழக்கமும் அதிகரித்து விடும். இதனால் இனி மக்களுக்கு நிம்மதியே இருக்காது. மக்கள் மஹிந்த சிந்தனைக்கே ஆதரவு அளித்தார்களே ஒழிய நாட்டையே அடியோடு அழிக்கும் இந்த கஸினோ சூதாட்டத்திற்கு அல்ல.

மக்கள் இன்று அவல நிலையில் இருக்கின்றபோது இப் படிப்பட்ட ஒன்றிற்கு அரசு வரிவிலக்கு கொடுப்பதன் மூலம் என்ன லாபம் கிடைக் கப்போகிறது? இப்படிப்பட்ட அரசின் திட்டத்தை முறியடிப் பதற்காக நாம் அனைத்து அமைச்சர்களுடனும் பேச்சு நடத்தவுள்ளதோடு, நாடாளுமன்றிலும் இதற்கெதிராகவே குரல் கொடுப் போம். எப்படியான சூழ் நிலை ஏற்பட்டாலும் இந்தக் கஸினோவை ஜாதிக ஹெல உறுமய ஒருபோம் அதரிக்காது என உறுதியாகத் தெரிவித் துக்கொள்கிறேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுச் சின்னங்களை அழிக்கும் தேவை கிடையா

## நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.3

பாதுகாக்கப்பட வேண்டிய வரலாற்றுச் சான்றுகளை அழிக்க வேண்டிய தேவை பிரதேச சபைக்குக் கிடையாது. நெடுந்தீவில் உள்ள அனைத்து வரலாற்றுச் சின்னங்களையும் பாதுகாக்கப் பிரதேசசபை சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும் என நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெடுந்தீவு துறைமுகத்தில் உள்ள குமுதினி படகு படுகொலை நினைவுத்தூபி மண்டபத்தின் புனர்நிர்மாண வேலைகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன. அந்த மண்டபம் அழிக்கப்படவில்லை.

வெளியிடங்களில் இருந்து வரும் மக்கள் அந்த மண்டபத்தின் புனிதத்தைத் தெரிந்து கொள்ளாது அதற்குள் அமர்ந்து உணவுவகைகளை உட்கொள்கிறார்கள். தூபியினதும் மண்டபத்தினதும் புனிதம் முக்கியத்துவம் என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும். மண்டபத்தைப் புனரமைத்துப் புதிய தோற்றம் பெறக்கூடியதாக அதனைத் திருத்தியமைக்கப் பிரதேச சபை தீர்மானித்ததற்கமைய இந்த வேலைகள் தற்சமயம் மேற்கொள்ளப்படுகின்றன.

குமுதினிப் படுகொலைக்குள்ளான மக்களின் நினைவாலயம் அது. அதனைப் பாதுகாக்கவும் புனிதத்தன்மை அழிந்து விடாத வகையில் பாதுகாப்பதும் பிரதேச மக்களினதும் பிரதேச சபையினதும் கடமை. சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 28 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள ஒரு முக்கிய சான்று அழிக்கப்படுவதாக தவறான தகவல்கள் வெளியாவது குறித்து கவலை கொண்டுள்ளோம் - என்றார். (த-7)

"_"

குமுதினி படகு படுகொலை நினைவுத் தூபி மண்டபத்தின் புனர்நிர்மாண வேலைகள் தற் சமயம் இடம் பெற்று வருகின்றன.

# பொலிஸாரின் குற்றங்கள் குறித்தும் மாணவர்கள் துணிவாக முறைப்பாடு

## பொலிஸ் அத்தியட்சகர் பெருமிதம்

யாழ்ப்பாணம், நவ .3

பொலிஸார் செய்து வரும் குற்றங்கள் மற்றும் விதிமுறை மீறிய செயல்கள் குறித்து பாடசாலை மாணவர்கள் துணிவாகக் கூறுகிறார்கள். அதனை வரவேற்பதாக காங்கேசன்துறை பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயசிறி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலை முடிவடையும் நேரத்திலும், தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று வரும் நேரத்திலும் வீதிச் சந்திகளில் நின்று சமூகச் சீர்கேடுகளில் ஈடுபடும் இளைஞர்கள் தொடர்பில் மாணவர்கள் எம்மிடம் முறையிடுகின்றனர். இவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சமூகத்தில் இடம்பெறும் குற்றச் செயல்கள், சமூக விரோதச் செயல்கள் தொடர்பில் அறிந்துகொள்ள மக்களுடன் தொடர்பாடலை வலுப்படுத்தி வருகிறோம். மக்களுடன் இணைந்து கலந்துரையாடலை நடத்தி வருகிறோம்.

அதன் ஒரு கட்டமாகப் பாடசாலைகளில் மாணவர்களுடன் கலந்துரையாடுகிறோம். இதுவரை அதிபர் அலுவலகங்களில் வைக்கப்பட்டிருந்த முறைப்பாட்டுப் பெட்டிகள் இப்போது அலுவலகத்துக்கு வெளியே வைக்கப்பட்டுள் ளன.

பெரிய குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை விரைவில் கைது செய்வதற்கு மக்களின் முறைப்பாடுகள் உதவியாக அமையும். மக்கள் பிரச்சினைகளையும் எதிர் காலத்தில் இலகுவாகத் தீர்க்க முடியும். -என்றார். (த-4)

# சுன்னாகம் நூலகத்துக்கு சிறந்த நூலக விருது

யாழ்ப்பாணம், நவ.3

தேசிய ஆவணமாக்கல் சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கலில் மாகாண ரீதியில் சிறந்த நூலகங்களாக 8 நூலகங்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகம், கிழக்கு மாகாணத்தில் ஏறாவூர் பற்று பிரதேச சபையின் செங்கலடி பொது நூலகம், ஹரிஸ்பத்துவ பிரதேச சபையின் ஹரிஸ் பத்துவ பொது நூலகம், வாரிய பொல பிரதேச சபையின் வாரிய பொல பொது நூலகம், பண்டாரவளை பிரதேச சபையின் பண்டாரவளை பொது நூலகம், பட்டிகம பிரதேச சபையின் பட்டிகம பொது நூலகம், எட்டியாந்தோட்டை பிரதேச சபையின் எட்டியாந்தோட்டை பொது நூலகம், ஹற்றன் பிரதேச சபை யின் டிமான் கண்டிய பொது நூலகம் என்பனவே விருதுகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட நூலகங்கள் ஆகும். (த-14)



# வடக்கு முதல்வரின் வருகை தீவகப் பகுதியை முன்னேற்றும்

## வேலணைப் பிரதேச சபைத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.3

புதிய அபிவிருத்தியை முன்வைக்கும் நோக்குடன் வடக்கு முதல்வர் இங்கு வருகை தந்துள்ளார். பின்னடைந்துள்ள தீவகத்துக்கு இது ஒரு முன்னேற்றம் என வேலணை பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா தெரிவித்தார்.

வேலணை மத்திய கல்லூரி தினமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் என்.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா,

தீவுப்பகுதியின் அபிவிருத்தியில் மிகவும் கூடுதல் கவனம் எடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல தரப்பட்ட தேவைகளை நிறைவேற்றியுள்ளார்.

மேலும் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப் பட வேண்டிய நிலையில் வடக்கு முதல்வர் இங்கு வருகை தந்துள்ளார்.

தீவுப் பகுதிப் பாடசாலைகளில் பல்வேறு குறைபாடுகள், ஆசிரியர் பற்றாக் குறைகள் நிலவி வருகின்றன. இலகுவாக மாணவர்கள் கல்வியைப் பெறக் கூடிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டியுள்ளது. ஒரு சமயம் சிறந்த கல்வி மான்களாகக் கொண்டிருந்த பிரதேசமாக விளங்கியதீவுப்பகுதிமீண்டும்அந்த நிலைக்குத் திரும்ப வேண்டும். நாங்கள் பின் தங்கியவர்கள் அல்ல என்ற எண்ணம் எல்லோரிடத்திலும் ஏற்படவேண்டும்-என்றார். (த-7)

# தென்னைச் செய்கைக்கு கிளாலியில் ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், நவ.3

கிளாலிப் பகுதியில் வசிக்கும் மக்கள் மத்தியில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்க முன் வந்துள்ள எஸ்.ஏ.ஓ நிறுவனம் வாகனங்களின் உதவியுடன் காடுபோல்வளர்ந்திருக்கும் பல்வேறு மரங்களை அழித்து நிலத்தைப் பண்படுத்திக் கொடுப்பதில் ஈடுபட்டுள்ளது.



போர்ச் சூழல் காரணமாக கிளாலிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் 17 வருடங்களுக்குப் பின்னர் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் வாழ்ந்து வந்த இடங்களிலிருந்த பயன் தரும் ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்புப் படையின ருக்கும் இடையில் ஏற்பட்ட போர் காரணமாக முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இவற்றை ஈடு செய்யும் வகையில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்க முன் வந்துள்ள மேற்படி நிறுவனம் கிளாலிப் பகுதியில் காடு போல் வளர்ந்திருக்கும் பல்வேறுமரங்களை இயந்திரங்களின் உதவியுடன் அழித்து வருகின்றது.

காணிகள் துப்புரவு செய்யப்படுவதையடுத்து தென்னங் கன்று நடுவதில் மக்கள் ஈடுபட்டுள்ளார்கள். (த-115)

# நீதிமன்றில் அலறிய கைத் தொலைபேசி

## வரணி வாசிக்கு எச்சரிக்கை

தென்மராட்சி, நவ.3

நீதிமன்றில் தொலைபேசி அலறியது. கையடக்கத் தொலைபேசியை வைத்திருந்த வரணி வாசி எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது.

நீதிமன்றச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வழக்கைப் பார்வையிட அமர்ந்திருந்தவர் வைத்திருந்த கையடக்கத் தொலைபேசி திடீரென அலறியது.

நீதிவானின் பணிப்பின் பேரில் நீதிமன்றப் பொலிஸார் இந்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதிமன்றுக்கு முதல்முறையாக வந்ததால் தனக்கு நீதிமன்ற நடவடிக்கை தெரியாதென குறித்ததாகக் கூறி அவர் மன்னிப்புக் கேட்டதால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். (த-9)



# காக்கைதீவுப் பகுதியில் இலையான்கள் பெருக்கம்

## கட்டுப்படுத்தக் கோரிக்கை

வலி.தென்மேற்கு, நவ.3

கல்லுண்டாய் காக்கைதீவு பகுதியில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளிலிருந்து உற்பத்தியாகி குடியிருப்புகளை நோக்கி படையெடுக்கும் இலையான்களின் தொல்லையிலிருந்து மக்களைப் பாதுகாக்குமாறு வலி. தென்மேற்குப் பிரதேச சபையைக் கோரியுள்ள நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தினர் மக்களுக்கு சுகாதாரசீர்கேடுகளை விளைவிக்கும் இலையான்களை கிருமி நாசினி விசிறி அழிக்குமாறும் கேட்டுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்துக்குட்பட்ட காக்கைதீவுப் பகுதியில் மலக்கழிவு உட்பட தினசரி பெருந்தொகையான திண்மக் கழிவுகள் வாகனாங்கள் மூலம் எடுத்துவரப்பட்டுக் கொட்டப்படுகின்றன.

திண்மக் கழிவுகளிலிருந்து உற்பத்தியாகும் இலட்சக் கணக்கான இலையான்கள் வடக்குப் பக்கமாகவுள்ள நவாலிக் கிராமத்தை நோக்கிப் படையெடுப்பதனால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் சுகாதார சீர்கேட்டுக்குள்ளாவதுடன் தொற்று நோய்க்கும் ஆளாகிறார்கள்.

எனவே மக்களின் பாதுகாப்புக் கருதி காக்கைதீவு பிரதேசத்தில் உற்பத்தியா கும் இலையான்களை மருந்துவிசிறி அழிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி சனசமூக நிலையத்தினர் பிரதேச சபைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (த-115)



# இத்தாலிக்கு அனுப்புவதாக 9 லட்சம் ரூபா மோசடி

## இரு பெண்களுக்கு எதிராக முறைப்பாடு

இத்தாலி நாட்டுக்கு அனுப் புவதாகக் கூறி 9 இலட்சம் ரூபாவைப்பெற்று பின்னர் அதனைத்திருப்பி ஒப்படைக்காமல் காலம் கடத்தி வரும் இரண்டு பெண்களுக்கு எதிராகப் பாதிக்கப் பட்டவர் முறைப்பாடு செய்துள்ளார் என காங்கேசன் துறை பிரிவு பொலிஸ் அத் தியட்சகர் தமயந்த விஜய சிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கரணவாய், கரவெட்டி யைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். கடந்த ஓகஸ்ட் மாதம் இவ்வாறு பணத்தைப் பெற்றுக் கொண்ட கொடிகாமத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களே அப்பணத்தை மோசடி செய்துள்ளனர். பொலிஸார் இது குறித்த விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். புன்னாலைக் கட்டுவனில் ஒருவருக்கு 7 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்து வங்கியில் பணம் வைப்பிலிடாது மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. கடந்த வருடம் ஏப்ரல் மாதம் இவ்வாறு காசோலை கொடுக்கப்பட்டது. இது வரை அதற்குரிய பணம் வைப்பிலிடப்படாத நிலையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் கடனாக 6 இலட்சம் ரூபா வைப் பெற்ற ஒருவர் அதனை இதுவரை திருப்பிக் கொடுக்காதமையால் பணத்துக்குரியவர் அந்தப் பணத்தைப் பெற்றுத் தருமாறு கோரி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### கந்தர் பழனி



காரைநகர் கிழக்கு பிட்டியெல்லையை பிறப்பிடமாகவும் சங்கம் விதி, சங்கத்தானை சாவகச்சேரியைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் பழனி நேற்று (02.11. 2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகமுத்து கந்தர்- இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், சுந்தரியின் சகோதரனும், சண்முகராஜா (டென்மார்க்), குகனேஸ்வரன் (சட்டத்தரணி), குகனேஸ்வரி, தவமலர், பத்மராஜா (சுவிஸ்), உதயகுமார் (பிரான்ஸ்), தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திஷோதா, தினோஷா, அபியுக்ஷன் அகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கம் வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்: குகனேஸ்வரன்.
(சட்டத்தரணி)

## மரண அறிவித்தல்

### கந்தையா சண்முகராசா



கரெவட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகராசா நேற்று (02.11.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11. 2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் பூவரந்திட்டி மண்டான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி

தகவல்:
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல்

(இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபர்- யாழ்ப்பாணம்)



துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்தினியம் மா திலகநாயகம் போல் நேற்று (02.11.2013) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான போல்-மாக்கிரட் தங்கமலர் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற லயனல் திலகநாயகம் போலின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவபாய்க்கியம் முத்துராசா, பரமேஸ்வரி சிவானந்தன், உமையம்மா கந்தப்பு மற்றும் இலச்சுமியம்மா செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும், உமாகாந்தன், கலாமதி, மோகமதி, சுமதி, வரகுணன் சசிமதி, தயாமதி, கௌரிதிலகன், பிரியம்வதா, பிரியவதனன், பிரியவத்சலன் ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2013) ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருசுமதவடி,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(சி/13538)
(10,14)

தகவல்:
குடும்பத்தினர்,
பெறாமக்கள்
(021 221 3323)



ஆசிரியர் தினத்தில் அக்கராயன் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளை அவதானிக்கும் ஆசிரியர்களும் மாணவர்களும். (க-18)



அண்மையில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வருகை தந்த வட மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கத்துக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச்சேர்ந்த ஊழியர்களின்சார்பாகநினைவுப்பரிசில் வழங்கப்படுகின்றது. (க-402)









வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 20 ஆவது ஆண்டு விழா கல்லூரியின் மண்டபத்தில் இடம்பெற்றபோது அதிதிகள் வர வேற்கப்படுவதையும், வித்தியா தீபம் நூலினை கல்லூரி பீடாதிபதி க.பேர்ணாட் வெளியிட்டு வைப் பதையும் கலை நிகழ்வையும் காணலாம். (க-402)



இலங்கை சி.க.கூ.சம்மேளனத்தின் வடமாகாண அபிவிருத் தித் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் உள்வாங்கப்பட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலக கட்டடத்தில் நடைபெற்றபோது வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் நா.சேனாதிராசா உரையாற்றுவதையும் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவகுருநாதன் உட்பட பல பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் காண முடிகின்றது. (க-402)





கடந்த 31 ஆம் திகதி வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற மாவீரன் பண்டாரவன்னியன் நினைவுநாள் விழாவில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சியையும் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (க-402)



[illegible]நிலை சமத் துவம் தொடர்பான விழிப்பூட் டும் செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஓர் அலகான பெண்கள் வள நிலை யம் இதனை நடத்தியது. இந்தச் செயலமர்வில் மாவட்டத்தின் பல கிராமிய அமைப்புக் களினதும் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் கறுப்பாக இருக்கிறீர்களா? கவலையை விடுங்கள்
**2 Weeks மட்டும் போதும்**

இப்போது தான் கறுப்பாக இருக்கின்றோம் என்று ஏங்கும் பல நபருக்கு இது ஒரு சிறந்த வரப்பிரசாதம்



- New Whitening Cream & Whitening Packs
- Day Cream Hand Cream. Herbal Soap

இவ்வனைத்து Creamமும் எந்த வித பக்கவிளைவும் கிடையாது.

**Full herbal Product**

( கை கறுப்பு, பரு, கரும்புள்ளி, முக சுருக்கம், முகம் பொலிவில்லாமை, வயதான தோற்றம், மற்றும் நிறம் அதிகரிக்க, அனைத்திற்கும்.

100 % உத்தரவாதம் ( All Skin Types )

( ஆண் / பெண் இருவருக்கும் ஏற்றது ) Cream Delivery உண்டு / கொழும்பு வரமுடியாதவர்களுக்கு Post இல் அனுப்பப்படும்.

( Cream Price : 2500/=Only)

ஒரே தடவையில் வித்தியாசம் காண எங்களிடம் Facial உம் உண்டு **Tel : 071 6733292**

GOODWIN (C/13398)

## தேவை

**கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் கால்நடை பண்ணைக்கு பின்வரும் வெற்றிடங்கள் உண்டு**

**கால்நடைவளர்ப்பு MANAGER/SUPERVISOR**

கல்வித்தகைமை: Degree/Diploma அல்லது கால்நடை விவசாயத்தில் அனுபவம் விரும்பத்தக்கது.

**வியாபார முகாமையாளர்/MARKETING REP**

இதே துறையில் Diploma அல்லது அனுபவம் தேவை மோட்டார் Bike அனுமதிப்பத்திரம் இருப்பின் மேலதிக தகைமையாகும். தகுந்த சம்பளம் வழங்கப்படும் விண்ணப்பங்கள் 10 நாள்களுக்குள் அனுப்பவும்.

suthersan1@live.com
kramachandran55@yahoo.com

Goodwin (C/13702)

## திருமண பொன்விழா வாழ்த்துக்கள்



இன்று [03.11.2013] ஞாயிற்றுக்கிழமை இனிய இல்லறத்தில் பொன் விழக்காணும் திரு.திருமதி ஞானப்பிரகாசம் ஆனாசிமுத்து தம்பதிகளை இனிதே வாழ்த்தும்.

திரு.திருமதி மகேந்திரன் சிசிலியா
திரு.திருமதி ஜேம்ஸ் அமலோற்பவம்
திரு.திருமதி புவனேஸ்வரன் மலர்
திரு.திருமதி அருமைநாயகம் இஜீயின் மேரி
திரு.திருமதி லயனல் மேரீஸ்ரெலா
திரு.திருமதி லியோநியூட்டன் திருத்தாரணி
திரு.திருமதி சுதாகரன் கிரிஜா
நிரோஜிகன்
திரு.திருமதி நிக்கலஸ் மேரிநிரோஜினி
மற்றும்

ரொஷான், நிருஷன், ஸ்ரீபன், மீரா, முகுந்தன், கர்ஷன், முகேஸ், நிவாஸ், நிவேதன், டன்ஸ்ரன், தெனிஸ்ரன், டிமெல்சன், தொனக்ஷன், அட்சயா, ஹரிக், பாபியன், பெறிக்ஷன்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

## GREATER LONDON SCHOOL OF ENGLISH AND MATHEMATICS

ஆங்கிலம் கதைப்பது இவ்வளவு சுலபமா!
Pass your Test Through us And Meet Your Partner.
A1 Spouse Visa, English Test, B1 Student Visa and IELTS.
Approved by the UK Border Agency. Our teachers are from the UK. Flexible Exam Dates.
Extra Support to Students.
Maths Revision Classes for GCE O/L (English medium)
Preparation Classes.
Tel. : 077 049 8619
162 A, Main Street, Jaffna.

(39689) (7.6.3)

## நிரந்தர தொழில் வாய்ப்புக்கள்

இத்தீபத்திருநாளில் எதிர்காலத்தினை பற்றிய கவலையா? நிரந்தர தொழில் வாய்ப்பு பெற விரும்புகிறீர்களா? கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள ஜேம், ரீ, டொபி, சொக்லேட், பிளாஸ்டிக், இரும்பாணி போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/Loading/unloading பிரிவுக்கு 18 - 50 வயது ஆண், பெண் இருபாலாருக்கும் 18,000/=, 32,000/= ஊதியத்துடன் உணவு, தங்கு மிட வசதி, குறைந்த விலைகளில் பெற்றுத் தரப்படும்.

**தொடர்புகளுக்கு: 077 556 1883, 077 711 7661**

(29837) (7.6.3)

## மாற்றமுடியாதது எதுவுமில்லை



ஒரே வாரத்தில் உங்கள் அனைத்து சரும பிரச்சினைகளுக்குமான தீர்வு !!!

கருமை நிறநீக்கம்,கரும்புள்ளி,தேமல்,கருவளையம்,உதடுகருமைநீக்கம்,கருந்திட்டுக்கள்,கழுத்துக் கருமை,மற்றும் அனைத்து வகையான சிகிச்சைகளும் வைத்தியரின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும்

முற்பதிவு அவசியம் 0777351954

"சானியாகேபல் கெயர்"
இல.262,நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை செம்மணிவீதி
facebook ID: saneya herbal



## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, நவ.3

மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்குப் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.பேரம்பலம், மாகாணக் கல்வித் திணைக்கள கணக்காளர் க.கமலரூபன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஓ-9)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நகர மத்தியில் Chapel Street இல் முதலாம் இரண்டாம் குறுக்கு தெருவுக்கு இடையில் 2பரப்பு 20 பேர்ச் காணி விற்பனைக்குண்டு விலை பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்பு
**0773 437 620**

## காணி விற்பனைக்கு

தொண்டமனாறு கெருடாவில் வீதியில் ஒன்பது (09) பரப்பு தோட்டக்காணி, தோட்டக்கிணறு மற்றும் சிறிய வீட்டுடன் உடனே விற்பனைக்குண்டு.

தொடர்பு :
**0044 7466171491**

## தேவை

தெஹிவளையில் 2 வயது குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு நம்பிக்கையுள்ள, அனுபவமுள்ள 40 வயதிற்குட்பட்ட பெண் ஒருவர் தேவை. குழந்தையின் வேலைகள் மட்டுமே. சம்பளம் 15,000/=

தொடர்பு : 072 244 0550, 077 765 2561 (சி/13397) (7.6.3)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரியிலிருந்து கண்டி A-9 வீதியிலுள்ள நுணாவில், கல்வயல் ஒழுங்கையில் அமைந்துள்ள நிலப்பரப்பு 5 குழி 14 காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 558 1532 (சி/13704) (7.6.3)

## குறுகிய கால வாடகைக்கு

வெள்ளவத்தை 45, நெல்சன் வீதியில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கும் வெளி மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வருபவர்களுக்கும், திருமண வைபவங்களுக்கும் சகல தளபாடங்களுடனும் அறை களாகவும், 2,3 அறைகள் கொண்ட வீடுகளாகவும் வசதிக்கேற்ப மாத, கிழமை, நாள் வாடகைக்குண்டு. குடும்பமாக வந்து தங்குவதற்கும் பொருத்தமானது. (A/C, Hot Water உட்பட)

011 250 2412 / 011 236 0544
Hot : 077 303 8063 / 071 805 4332

வாகனத் தரிப்பிட வசதி உண்டு. (சி/13395) (10.6)

## காணி விற்பனைக்கு

**நல்லூர் நாவலர் வீதி, கைலாச பிள்ளையார் கோயில் சந்தி / கோயில் வீதி சந்தி அருகில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

தொடர்பு :
072 222 0488 (சி/13392) (7.6.3)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி-பருத்தித்துறை பிரதான வீதியில் கெருடாவில் கந்தசாமி கோயிலிலிருந்து சாவகச்சேரி நோக்கி 500m (½km) தூரத்தில் 7 துண்டங்களாக அமைந்துள்ள 75 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. துண்டங்களாகவோ (வரைபடமுள்ளது) முழுமையாகவோ விரும்பியபடி வாங்க முடியும். தொடர்புகளுக்கு: திருமதி யோகா நாகேந்திரம், கெருடாவில் கந்தசாமி கோயில் அருகில், பருத்தித்துறை வீதி, கெருடாவில், சாவகச்சேரி.

தொலைபேசி : 077 160 1115 (சி/13703) (7.6.3)

## விசேட விலைக் கழிவு

| | | |
|---|---|---|
| 4.R | - | 11/= |
| 10x30 | - | 130/= |
| 12x30 | - | 150/= |

அல்பம் கட்ட ஒரு பக்கம் (UR) உட்பட - 50/=

மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 1358 (சி/13534) (7.6.3)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

T.V.S. XL ... மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு.
சீனியர் லேன், யாழ்ப்பாணம்.077 706 6487

(39678) (7.6.3)

# உங்களுக்கு அவசரப்பணத்தேவை உள்ளதா?

**SINGER FINANCE**

நாடுங்கள்

உங்கள் வாகனப் புத்தகத்தைக் கொடுத்து உங்கள் பணத்தைப்பெற்றுக் கொள்ளுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது



| | | |
|---|---|---|
| தொடர்புக்கு | தனு | 077 9 357 124 |
| | பிருந்தன் | 078 5 000 917 |

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

(C/13393)

## வேலை வாய்ப்பு

5 வருடத்திற்கு மேற்பட்ட சேவிஸ்ஸ்ரேசன் (Service Station) அனுபவமுள்ள
(முழுமையான அனுபவம்)
சேவிஸ் செய்யக் கூடியவர்கள் தேவை.

SIVA SERVICE STATION
No.278, Nunavil, Kandy Road, Chavakachcheri

**தொடர்பு: 077 784 9207**

(39652)(6.3.4)

## பழ வகைகளும் மரக்கறி வகைகளும் கொள்வனவு

- மாம்பழம்
- வாழைப்பழம்
- வத்தகைப்பழம்
- விளாம்பழம்

சகல விதமான மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகள் கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பதனிடும் நிறுவனம் ஒன்றுக்கு தேவைப்படுகின்றன. விவசாய அமைப்புகள் மற்றும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளன.

**தொடர்புகளுக்கு:**
*பிரதேச முகவர்களை நாடவும்.*

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 077 857 6896 |
| கிளிநொச்சி/முல்லைத்தீவு | 077 827 7692 |
| மன்னார்/வவுனியா | 077 872 0324 |

(சி/39668)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம் மாற்றப்பட்டுள்ளது நாகபூசணி திருமணசேவை

15/11, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வருகின்றது. நீங்கள் விரும்பும் மணமகனையோ, மணமகளையோ பொருத்தமாக உடன் தெரிவு செய்யலாம். (39682)(3.6.4)

T.P: 077 138 7596, 021 222 7585, 075 554 6000, 021 222 9306

## கப்பல் நிர்மாணத்துறையில் வெற்றிடங்கள்

கப்பல் நிர்மாணத்துறையில் பல வெற்றிடங்கள் கொழும்பு/ யாழ்/திருகோணமலை/விசுவமடு/பாசிகுடா / கம்பஹா/ நுவரெலியா பிரதேசங்களில் மேசன்/செடலின் பாஸ்/பெயின்டர்/ தச்சர் (1200/= மேல்), கை உதவி யாளர் (900/= மேல்) வார சம்பளம் / மாத சம்பளம், உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 556 1883 (29838) (7.6.3)

## வேலை வாய்ப்புக்கள்

தீபத்திருநாளில் உங்கள் கனவு கப்பல் / விமான நிலையம் (தனியார்) பணிபுரிவதா? கப்பல் புனர் நிர்மாணத்துறையில் வெல்டர்/ தச்சர்/ சாதாரண ஊழியர்கள் விமான நிலையத்தில் காகோ/ கேட்டரிங்/சுத்திகரிப்பாளர் பல பிரிவுகளில் வெற்றிடம் 18 - 45, சம்பளம் 18,000/=, 45,000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள், குழுக்களாக இணையலாம்) (29836)

தொடர்புகளுக்கு: 077 556 1883 (7.6.3)

## விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

DIPLOMA IN ENGLISH Class போகாமலே இங்லீஸ் படிக்கலாம்.

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு முழுப்பெயர் ,முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.

பாடநெறியில் இணையும் அனைவருக்கும்

@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 4 நான்கு
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று./ மாணவர் அடையாள அட்டை
@- 2014 ஆம் ஆண்டு வர்ண கலண்டர் ஒன்று இலவசம்.
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன வழங்கப்படும். (38684)(45.3.6)

மேலதிக விவரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

பாடநெறிக்கட்டணம். ரூபா 1800/- மாத்திரம் அறவிடப்படும். மாற்றுக்கட்டணம் இல்லை.

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523


## திறப்பு விழா

யாழ்ப்பாணம் நவ.3

நீர்வேலி தெற்கு சிவசங்கரபண்டிதர் சன சமூக நிலைய நூல் நிலையத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வலி கிழக்கு பிரதேச சபை உபதலைவர் க.தர்மலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாண சபைத் தவிசாளர் சி.வி.கே. சிவஞானம் மற்றும் வடமாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி, பா.கஜதீபன் மற்றும் த.சிவயோகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-400)

## கலந்துரையாடல்

யாழ் மாவட்டப் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு சங்க தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

புதிய தொழில் முயற்சிகளில் பாரவூர் திகளை ஈடுபடுத்துதல் உட்பட பலமுக்கிய விடயங்கள் கூட்டத்தில் பற்றிக் கலந்துரையாடவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-400)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations



சக்கரியாஸ் யஸ்ரின் பால்தாஸ்
(ஆசிரியர் - வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றும் அன்பிற்குரிய சக்கரியாஸ் யஸ்ரின் பால்தாஸ் அவர்கள் சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றமையையிட்டு மனதார வாழ்த்துகின்றோம். இவர் பணி தொடர்ந்திட எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

Best Wishes!

அன்புடன் வாழ்த்துவோர்: பெற்றோர், சகோதரர்கள், குடும்பத்தினர்.
நவாலி வடக்கு, மானிப்பாய்.

## VACANCIES @ VAVUNIYA

**IT Lecturer** (Full time)

MS Office / Graphic Designing / Web Designing
Male / Female -Ability to Teach in English &Tamil

Hardware / Networking
Male -Ability to Teach in English &Tamil

**Receptionist**
Female- Age between 20 - 35 with Fluency in English & Tamil Languages

**English Lecturer / Trainee English Lecturers** (Full time)
Related Qualification with Experience

**Trainee Lecturer for Accounting Packages**

**Office Assistants** (Full time)

If you are the right person Email / post your CV to the following address within 10 days.
gccareers@yahoo.com

(சி.13503)

Please mention the post applied for and the branch

Manager,
Golden College,
548, Peradeniya Rd,
Kandy

GOLDEN COLLEGE
CITY CAMPUS
548, Peradeniya Road, Kandy 0777 222 527 081 220 55 44



## மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
## ஸ்கந்தஷஷ்டி திருவிழா விஞ்ஞாபனம்



மெய்யன்பர்களே!

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் ஸ்கந்தஷஷ்டித் திருவிழா, சூரசம்ஹாரத் திருவிழா, பாறணை, திருக்கல்யாண வைபவ நிகழ்வுகள் வெகுவிமரிசையாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. நிகழும் மங்கலகரமான ஐப்பசி மாதம் 18ஆம் நாள் இன்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை முதல் ஸ்கந்தஷஷ்டித் திருநாள் முதலாம் நாள் உபயமாக ஆரம்பித்துத் தொடர்ந்து விழாக்கள் நடைபெறும். இத்தருணம் மெய்யன்பர்கள் தங்கள் குடும்பம், உற்றார், உறவினர், இனசன பந்துக்களுடன் சுற்றம்சூழல் சகிதம் ஆலயத்துக்கு வருகைதந்து விழாக்களில் பங்குபற்றி பூர்த்தி செய்து கருணைக்கடலாம் மாவைக் கந்தப்பெருமானின் திருவருள் பெற்று இன்புற்று சுகமாக ஆனந்தப் பெருவாழ்வு வாழவேண்டுமாய்ப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசீர்வதித்து வருக வருக ஆனந்தம் பெறுக என அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்வுகள்

| காலை | மாலை |
|---|---|
| 06.00 மணி திருவனந்தல் | 3.30 மணி ஸ்நபனாபிஷேகம் |
| 09.00 மணி ஸ்நபனாபிஷேகம் | 4.30 மணி சாயரட்சை பூசை |
| 10.00 மணி காலைசந்தி பூசை | 5.15 மணி இரண்டாம் கால பூசை |
| 11.00 மணி வசந்தமண்டப பூசை, திருவிழா, மகேஸ்வர பூசை (அன்னதானம்) | 5.30 மணி வசந்தமண்டப பூசை திருவிழா சுவாமி வெளிவீதி வலம்வருதல் |
| | 8.30 மணி அர்த்தசாம பூசை, திருவருட் பிரசாதம் வழங்குதல் |

**05.11.2013 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு வேல் வகுப்புப் படித்து வேல் வாங்கும் திருவிழா**

ஐப்பசி மாதம் 23ஆம் நாள் (08.11.2013) வெள்ளிக்கிழமை ஷஷ்டித் திருவிழா வழமைபோல் காலை நிகழ்வுகள் நடைபெறும்.

### 08.11.2013 மாலை நிகழ்வுகள்

| | |
|---|---|
| ஒரு மணி ஸ்நபனாபிஷேகம் | 5.30 மணி வடக்கு வீதியில் விசுவரூப தரிசனம் சூரசம்ஹாரம் அலங்காரம் அர்ச்சனை ஆராதனைகள் |
| 2.00 மணி சாயரட்சை பூசை | 6.00 மணி ஸ்நபனாபிஷேகம் பூசை திருவிழா |
| 2.30 மணி இரண்டாம் கால பூசை | 8.30 மணி அர்த்தசாம பூசை, பிரசாதம் வழங்குதல். |
| 2.45 மணி வசந்தமண்டப பூசை சுவாமி சூரசம்ஹாரத்துக்காக எழுந்தருளி சூரன் போர்த் திருவிழா | |

### ஐப்பசி மாதம் 24ஆம் நாள் 09.11.2013 சனிக்கிழமை பாறணை

| காலை | மாலை |
|---|---|
| 04.30 மணி உஷத்கால பூசை (திருவனந்தல்) | 2.30 மணி ஸ்நபனாபிஷேகம் |
| 05.00 மணி ஸ்நபனாபிஷேகம் | 3.30 மணி சாயரட்சை பூசை |
| 06.00 மணி காலைசந்தி பூசை | 4.00 மணி வசந்தமண்டப பூசை |
| 06.30 மணி வசந்தமண்டப பூசை | 4.30 மணி பூந்தண்டிகையில் வள்ளிதேவ சேனா சகிதம் முருகப் பெருமான் வெளிவீதி வலம்வருவார் |
| 10.30 மணி உச்சிக்கால பூசை மகேஸ்வர பூசை(அன்னதானம்) | 5.30 மணி திருக்கல்யாண நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெறும். |
| | 8.30 மணி அர்த்தசாமபூசை, திருவருட் பிரசாதம் வழங்குதல. |

தொடர்புகளுக்கு:
T.P. No. L.Ph. 0094 - 213210349
H.Ph. 0094 - 778302573
A/c No: S.Ratnasabapathkurukkal
117020042437
H.N.B. Chunnakam

மாவைக்கந்தன் அடியான்
மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீனகர்த்தா

(C/13504)(10.6.3)



BOC

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ் மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | அடகுத் திகதி | ஏல விற்பனைத்திகதி இடம் நேரம் |
|---|---|---|
| யாழ்.அதி மேற்தரக்கிளை (யாழ் கச்சேரி, யாழ் பஸ் நிலையம், விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 08.02.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 08.08.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | யாழ்.அதி மேற்தரக்கிளை 2013 நவம்பர் 9ம், 10ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| யாழ். பிரதான வீதி கிளை | | |
| கோப்பாய் கிளை | 15.02.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 15.08.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | கோப்பாய் கிளை 2013 நவம்பர் 16ம், 17ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| கன்னாகம் மேற்தரக்கிளை (புன்னாலைக்கட்டுவன் விரிவாக்கற்கிளை உட்பட) | 22.02.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 22.08.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | சுன்னாகம் கிளை 2013 நவம்பர் 23ம், 24ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| காங்கேசன்துறை கிளை (அளவெட்டி , இளவாலை விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 24.02.2013 இக்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 24.08.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | வடபிராந்திய காரியாலயம் 2013 நவம்பர் 25ம், 26ம், 27ம், 28ம், 29ம், திகதிகளில் காலை 9.30 மணிக்கு |
| காரைநகர் கிளை | | |
| சங்கானை கிளை | | |
| மானிப்பாய் மேற்தரக்கிளை (சாவல்கட்டு விரிவாக்கற்கிளை உட்பட) | | |
| உரும்பிராய் கிளை | | |
| திருநெல்வேலி கிளை (கல்வியங்காடு விரிவாக்கற்கிளை உட்பட) | | |
| யாழ்.2ம் மேற்தரக்கிளை | 29.02.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 29.08.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | யாழ்.2ம் மேற்தரக்கிளை 2013 நவம்பர் 30ம், 2013 டிசம்பர் 1ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| கொக்குவில் கிளை | | |
| ஊர்காவற்றுறை கிளை (ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினாதீவு விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 06.03.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 06.09.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | ஊர்காவற்றுறை கிளை (வேலணை) 2013 டிசம்பர் 7ம், 8ம் திகதிகளில (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி (வடபிராந்தியம்)
வடப்ராந்திய காரியாலயம்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி இல. 021 222 4683
021 222 3126

(C/13525)(10.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 / 08 / 1926

மறைவு 03 / 11 / 2012

**அல்பிறெட் இராஜேந்திரா சபாபதிப்பிள்ளை**

"கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்"

ஏங்கள் நினைவுகளில் என்றும் வாழ்கின்றீர்
எங்கள் செபங்களிலும் எங்கள்
வாழ்வின் வழிகளிலும் என்றென்றும்
உம்மை நினைவு கூருகின்றோம்.

ஜோய்லின், உடுவில் வீதி,
மானிப்பாய்.

(39706)(12.6.3)

குடும்பத்தினர்.

# 800 தமிழ் பொலிஸார் விரைவில் வடக்குக்கு

யாழ்ப்பாணம், நவ.3

வடக்கு மாகாணத்தில் பணியாற்ற வென 800 தமிழ்ப் பொலிஸார் விரைவில் நிய மிக்கப்படவுள்ளனர். தற் போது 460 தமிழ் பொலிஸார் வடக்கில் பணிபுரிகின்றனர் என்று காங்கேசன் துறைப் பிரிவு பொலிஸ் அத் தியட்சகர் தமயந்த விஜயஶ்ரீ தெரிவித்தார். நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற வாராந்த செய்தி யாளர் சந்திப்பிலேயே அவர் இத னைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது: போருக்குப் பின்னர் 60 தமிழ்ப் பொலிஸார் பயிற்சிமுடித்துவெளியேறித் தற்போது வடக்கில் பணி புரி கின்றனர். தற் போது வடக்கில் 460 தமிழ்ப் பொலிஸார் பணியாற்றி வருகின்றனர். இரண்டு பேர் உப பொலிஸ் பரிசோதர்களாக உள் ளனர். தற்போது 800 தமிழ் பொலிஸார் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி நிறைவ டைந்ததும் அனை வரும் வடக்கு மாகாண பொலிஸ் நிலையங்களில் நியமிக்கப்படுவர். - என்றார். (கு-4)

## 17 குடும்பங்களுக்கு கருவாடு பதனிடும் பயிற்சி

யாழ்ப்பாணம், நவ.3

வடமராட்சி கிழக்கில் பெண் தலைமைத்துவத் தைக் கொண்ட 17 குடும்பங்களுக்கு நவீன முறையில் கருவாடு பதனிடுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த உடுத்துறை, தாளையடி, ஆழியவளை கிராமங்களைச் சேர்ந்த 17 பெண்களுக்கு எஸ்.ஏ.எச்.நிறுவனம் முதற்கட்டமாகப் பயிற்சிகளை வழங்கியுள்ளது.

கருவாடு பதனிடும் தொழில் முயற்சி ஊடாக ஓரளவு வருமானத்தைப் பெறக்கூடியதாக 40 ஆயிரம் ரூபா நிதியுதவியையும், ஊக்குவிப்பு தொகையாக இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.

மூன்றுதினங்கள் வழங் கப்பட்டுள்ள இந்தப்பயிற்சி ஊடாக நவீன முறை யில் சுகாதார ரீதியிலும் கருவாட்டைப் பதனி டுவ தற்கான அனுப வத்தை அவர்கள்பெற்றுக்கொண் டுள்ளனர். (வ-14-115)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வர்ணமணி தெய்வேந்திரம்



முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வர்ணமணி தெய்வேந்திரம் 31.10.2013 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - பசுபதி தம் பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தெய்வேந்தி ரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா - சின்னப் பிள்ளை தம்பதிய ரின் மருமகளும், செல்வன் (கனடா), ரூபன் (கனடா), சுமதி (வட்டக்கச்சி), கோமதி (முரசு மோட்டை), முகுந்தன் (கனடா), கீதா (ஜேர்மனி), வரதன் (பிரான்ஸ்), பாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிதி, வதனி, இராசேந்திரன், லோகேந் திரன், தாரகா, பாபு, சுமலி, சுஜி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை மாலை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்.**
**021 320 8940**

(37575) (12.6.3)

## மரண அறிவித்தல்

### நல்லையா கல்யாணசுந்தரம் (திருச்செல்வம்)

(பிரிவு உதவியாளர் மத்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர் பணிமனை, வவுனியா)



வவுனியா நொச்சி மோட்டையைப் பிறப் பிடமாகவும், வைரவ புளியங்குளம், வைரவ கோவில் வீதியை வதி விடமா கவும்கொண்ட நல்லையா கல்யாண சுந்தரம் (திருச்செல்வம்) 01.11.2013 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற நல்லையா - சிதம்பரம் தம்பதியின ரின் அன்பு மகனும், நித்திய சுந்தரேஸ்வரர் (இளைப்பாறிய நீர்ப் பாசனப் பொறியியலா ளர்) - மகேஸ்வரி (இளைப் பாறிய ஆசிரியை) தம் பதியரின் அன்பு மருமகனும், கல்யாண சுந்தரம் றஞ்சினி (இலங்கை வங்கி முகா மையாளர் - புதுக்குளம்) அவர்களின் அன்புக் கணவரும், திவாகரன், சுபாங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோஜினி தேவி, ஶ்ரீஸ்கந்தராஜா (பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்- முல்லைத்தீவு), திலகவதி (கனடா), இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி (லண்டன்), மங்கையர்க் கரசி, சந்திரமதி (ஆசிரியை - வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பஞ்சலிங்கம், றேனுகா (இளைப்பாறிய HNB வங்கி யாளர்), மகேந்திரராஜா (கனடா), ஶ்ரீதரன் (பிரான்ஸ்), தயாபரன் (லண்டன்), ஶ்ரீ நவரட்ணராஜா (உரிமையாளர் Lanka Hydro Winpower Pvt Ltd) Dr.செந்தூரராஜா (பொது வைத்தியசாலை, வவுனியா) பாலேஸ்வரன் (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (சம்பத் வங்கி, சுன்னாகம்), பிரபாகரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை வைரவ புளியங்குளத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக நண்பகல் 12.00 மணியளவில் நொச்சிமோட்டை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

33, வைரவகோயில் வீதி,
வைரவபுளியங்குளம், வவுனியா.
024 222 0142

(சி13535) (12.6.3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## கௌரி விரதம்

கீரிமலை நகுலேஸ் வரர் சமேத நகுலாம் பிகை ஆலயத்தில் கேதார கௌரி விர தப் பூர்த்தி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அபிஷேக பூசை க ளுடன்கௌரிக் காப்பு நிகழ்வு நடைபெ றும். (ந)

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, நவ.3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களின் அதிபர்களுக் கான பௌதிகவளம் தகவல் சேகரிப்பு தொடர்பான கூட் டம் நாளை திங்கட் கிழமை பிற்ப கல் 2 மணிக்கு வல யக் கல்வி அலு வலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும் என்று வல யக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள் ளார். (ஒ-9)

### செல்வரட்ணம் விமலநாதன்



யாழ்.கொக்குவி லைப் பிறப்பிடமாக வும் சுவிஸை வசிப் பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் விம ல நாதன் கடந்த செவ் வாய்க்கிழமை சுவி ஸில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான செல்வரட்ணம் -பூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற வர்களான சரவண முத்து -தை யல் நாயகி (தங்கம்மா) தம்பதிய ரின் அன்பு மரு மகனும், பரலோகநாயகி (வவா- கௌரி) இன் அன்புக் கணவரும், விமலகௌரி (கௌசி- சுவிஸ்), பிரசன்னா (சுவிஸ்), குணம் (சுவிஸ்), டானியன் (சுவிஸ்) ஆகியோரின் பாச மிகு தந்தையும், பீற்றர் (சுவிஸ்), அந்திரியாஸ் (சுவிஸ்), தர்சாயினி, தாரணி, சரண்யா, மாறன், சஞ்சிவ், கரன், அனுசியா, ரதி, யோகன், ஜெசிரன், சிலிட்த்தரன், தரன், பவினா, கபிலாஸ், மிதுஷன், கிருஷன், கோபா, விக்னா, வனோ, வசந்தி, பிறேம் குமார், தயாநிதி, றதி, நந்தினி, றூபி, றூபன், நந்தன் ஆகி யோரின் பாசமிகு மாமனாரும், சந்துரு, லேயா, ஜெனிபர், நாதன் ஆகியோரின் அன்புப் பேரனும், சுலோசனா, வசந்தகுமாரி, யோகேஸ்வரி, மங்கையர்க்கரசி, கெங்காவாணி, பர மேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்றவர்களான கோபால கிருஷ்ணன், வசந்தினி ஆகியோரின் சகோதரனும், செல்வ நாயகம் (சுவிஸ்), காலஞ்சென்ற சற்குணம் (குணம்), புவ னேஸ்வரி(சுவிஸ்), செல்வரட்ணம், சிவராசா, பாலச் சந்திரன், சிறிஸ்கந்தராஜா, ஞானதாஸ் திருச்செல்வம், விக்னா, பிறேம்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெசோதன், பெல்சி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(04.11.2013) திங்கட் கிழமை சுவிஸில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுவிஸ்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**வவா கௌரி** (மனைவி- 0041762044124, )
**கௌசி** (மகள்- 0041798606756)

(சி/13516)(3.6.4)

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயார்

மறைவு 03 / 11 / 1987

Rajah Mahendran RETD.SLAF, INDRAN Consultant Vasanthy — Suresh — Priyanthi — Mahendraraj

Vasanthy Sivapatham தத்தின் அன்புப் புதல்வர்கள்

இருபத்தாறு ஆண்டுகள் ஆனாலும் ஆறிடுமோ எம் நெஞ்சம்
அன்பால் அனைவரையும் கவர்ந்துவிட்டுச் சென்றதேனோ?
என்றும் நீங்கள் எம் நெஞ்சில் வாழ்ந்திட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

40/3, MAE VILLA மானிப்பாய் வீதி, உடுவில்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணர் பாசறை ஆண்டு விழா



யாழ்ப்பாணம், நவ.3

இலங்கை சாரணர் சங்க காங்கேசன்துறை மாவட்டப் பாடசாலைகளின் சாரணர் பாசறையும் 33 ஆவது ஆண்டு விழாவும் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சற்குணராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் கைலாசநாதனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் அருந்தவமும் கலந்து கொண்டனர்.

சாரணர் பாசறையில் பின்வரும் பாடசாலைகள் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.

**குருளைச் சாரணர் பிரிவில்**

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம், பண்ணாகம் சேர் கனகசபை வித்தியா லயம், தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்

**சாரணர் பிரிவில்**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, வசாவிளான் ம.ம. வி. (ந-9)

# சமூக மாற்றத்துக்கான பரிந்துரைகளை கோருகிறது தேசிய கல்வி ஆணைக்குழு

யாழ்ப்பாணம், நவ.3

பூரணத்துவமான தேசிய கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு, ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்கென தேசிய கல்வி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கவும், பரிந்துரைகளை வழங்கவு மென நியமிக்கப்பட்டுள்ள ஓர் அரச நிறுவனமாகும்.

● கல்வியின் சகல அம்சங்களிலும் கல்விக் கொள்கையைத் தொடருவதற்கானதும், தேவையான இடத்து சமூக மாற்றத்தை ஏற்படுத்த தக்கவாறு, மேற்கொள்ளப்பட வேண்டிய கல்வி முறைமையை ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்வது-

● தற்போது நடைமுறையிலுள்ள தேசிய கல்விக் கொள்கையையும், திட்டத்தை அல்லது திட்டங்களை ஒரு காலப்பிரமாணத் திற்கமைய ஆராய்ந்து, மாற்றங்கள் தேவையாயின் அவை குறித்து ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைப்பது-

● கல்வி சம்பந்தமான ஏனையவிடயங்களில்ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவது என்பன ஆணைக்குழுவின் பிரதான பணிகளாக அமையும்.

குறிப்பிடப்பட்ட பணிகளை மேற்கொள்வதில் தேசிய கல்வி ஆணைக்குழு தற்போது ஈடுபட்டுள்ளது. தற்போதைய கல்விக் கொள்கைகள், திட்டங்களில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் ஏதும் இருப்பின் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான பணிகளிலும் அது தற்போது ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களிடமும் எழுத்து மூலமான பெறுமதி வாய்ந்த ஆலோசனைகளை அது கோரியுள் ளது.

இப்பணியின் குறிக்கோளை அடைவதற்கு அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்பை எதிர்பார்ப்பதாக ஆணைக்குழு வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (அ)

# கிளிநொச்சி வர்த்தகர்கள் செலுத்தினர் தண்டம்

கிளிநொச்சி, நவ.3

கிளிநொச்சி பரந்தன், முரசு மோட்டை, தருமபுரம் ஆகிய பகுதிகளில் தமது கடைகளில் கூடிய விலையில் பொருள்களை விற்பனை செய்த மற்றும் காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த ஆறு வர்த்தகர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியின் பரந்தன் தொடக்கம் தருமபுரம் வரையான பகுதியில் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் மேற்கொண்ட திடீர்ச் சோதனையின் போது இந்த வர்த்தகர்கள் மாட்டிக் கொண்டனர்.

குறித்த வர்த்தகர்கள் கடந்த புதன் கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன் றில் முன்னிலைப்படுத்தப் பட்டனர். நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் இவர்க ளுக்குத் தலா ஆயி ரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு தீர்ப்பளித் தார். (க-6)

## கால் நடைகளை கட்டி வளர்க்கவும்

வடமராட்சி, நவ.3

வடமராட்சி கிழக்குப் பிர தேசத்தில் அம்பன், குடத் தனைப்பகுதி வயல்களில் நெற்பயிர்கள் முளைக்கத் தொடங் கியுள்ளதால் ஆடு, மாடுகளைக் கட்டாக் காலியாக நடமாடவிடாது கட்டி வளர்க் குமாறு அம்பன் விவசாய சம்மேள னம், கமக்கார அமைப்புக்கள் என்பன கோரிக்கை விடுத் துள்ளன.

முளைக்கும் நெற்பயிர் களை கட்டாக் காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகள் நாசப்படுத்தி வருவதாக விவசாயிகள் புகார் தெரி வித்ததைத் தொடர்ந்து குறித்த பகுதி கால்நடை வளர்ப்போரி டம் இந்தக் கோரிக்கை விடப்பட்டுள் ளது.

கட்டாக்காலிகளாக ஆடு, மாடுகள் திரிவதைத் தடுத்து நிறுத்தி கட்டி வளர்க்கு மாறும், இல்லையேல் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பிடிக்கப்பட்டு கமநல சேவைத் திணைக்கள சட்டத்துக்கு அமைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அம்பன் விவசாய சம்மே ளனமும், கமக்கார அமைப்பும் எச்சரிக்கை விடுத்துள்ளன. (ந-8)

## தீபாவளி கொண்டாட்டம்

வடமராட்சி, நவ.3

நெல்லியடி தேசிய அபிவிருத்தி வங்கிக்கிளையில் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் 10 மணி வரையான காலப் பகுதியில் தீபாவளி தினக் கொண்டாட்டம் நடைபெறவுள்ளது.

இதில் வாடிக்கையாளர்களைக் கலந்துகொள்ளு மாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (ந-8)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**நாளை**

ஐப்பசி-18 திங்கட்கிழமை 04.11.2013
திதி: பிரதமை மா.இ.05.34 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.இ.11.29 வரை
சுபநேரம்: 12.04 - 01.34 வரை
இராகுகாலம்: 07.34 - 09.04 வரை

**மேடம்:** நீண்ட நாள் எண்ணங்களைப் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பிள்ளைகளின் உடல்நலத்தில் அக்கறைக் காட்டுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும்.

**இடபம்:** கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. குழந்தைகளின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். தந்தையின் உடல் நிலை சீராகும்.

**மிதுனம்:** புது முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்துப் பொழுதைக் கழிப்பீர்கள்.

**கடகம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போவீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிங்கம்:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். கடன் பிரச்சனை களுக்குத் தீர்வு காண்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் விலகும்.

**கன்னி:** பிள்ளைகளின் வருங்காலம் குறித்து யோசிப்பீர்கள். வர வேண்டிய பணத்தைப் போராடிப் பெறுவீர்கள். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**துலாம்:** வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் விருப்பங்களைநிறைவேற்று வீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள்.

**தனுசு:** முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**மகரம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர்ப் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. வருங்காலத் திட்டங்களைப் பற்றி நண்பர்களிடம் விவாதிப் பீர்கள்.

**கும்பம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவு பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு சுமார்தான்.

**மீனம்:** மனைவிக்குள் ஆரோக்யமான விவாதங்கள் வந்துப் போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். புது நட்பு மலரும். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் லாபம் வரும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 3 | | 2 | | 7 | 4 | |
| 2 | | | | 7 | | 9 | | |
| | 7 | 8 | 9 | 4 | 6 | 3 | | |
| | | | 8 | | | | | |
| | | 5 | 4 | 9 | 2 | 6 | | |
| | | | | | 1 | | | |
| | | 2 | 6 | 1 | 7 | 4 | 3 | |
| | | 9 | | 8 | | | | 2 |
| | 4 | 1 | | 3 | | 8 | 5 | |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 3 | 1 | 2 | 8 | 7 | 4 | 6 |
| 2 | 6 | 4 | 3 | 7 | 5 | 9 | 1 | 8 |
| 1 | 7 | 8 | 9 | 4 | 6 | 3 | 2 | 5 |
| 4 | 2 | 7 | 8 | 6 | 3 | 5 | 9 | 1 |
| 8 | 1 | 5 | 4 | 9 | 2 | 6 | 7 | 3 |
| 3 | 9 | 6 | 7 | 5 | 1 | 2 | 8 | 4 |
| 5 | 8 | 2 | 6 | 1 | 7 | 4 | 3 | 9 |
| 7 | 3 | 9 | 5 | 8 | 4 | 1 | 6 | 2 |
| 6 | 4 | 1 | 2 | 3 | 9 | 8 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல் பழமும் அதன் நற்குணங்களும்



இயற்கை மனிதனுக்கு வழங்கிய ஓர் அருட்கொடை தான் கனிவர்க்கங்கள். அந்த வகையில் அண்மைக் காலமாக எமது பகுதிகளில் தெருவோர வியாபாரிகளின் வியாபாரப் பொருள்களில் ஒன்றாக நாவல்பழம் காணப்படுகின்றது. தற்போது நாவல் பழ சீசன் என்பதால், பலரது வாய் நீல நிறமாகவே காணப்படுகிறது. அந்தந்த சீசனில் கிடைக்கும் பழவகைகளைச் உண்பது சில காலகட்டங்களில் ஏற்படும் நோய்களைத் தடுக்கவல்லது என்று எம் வீடுகளில் வயதானவர்கள் கூறுவது மறுக்கப்பட முடியாத ஒன்றுதான். அந்த வகையில் தற்போதைய சீசனுக்கு கிடைக்கப்பெறும் நாவல் பழத்தை மருத்துவப் பார்வையில் அணுகுவது காலத்தின் தேவையாகக் கொள்ளலாம்.

பொதுவாக, பழங்கள் குறைந்தளவு கலோரிப் பெறுமானத்தையும் கொழுப்பையும் மற்றும் இலகுவான வெல்லத்தையும் கொண்டுள்ள தாலும், நார்ப்பொருள்களையும் உயிர்ச்சத்துக் களையும் தேவைக்கேற்ற வகையில் தன்னகத்தே சேமித்து வைத்திருப்பதாலும் எமது உடல்நலத்தை பேணுவதில் பழவகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.


தினமும் ஒரு பழத்தை உண்டுவந்தால் வைத்தியரை நாடவேண்டி ஏற்படாது என்று ஒரு புதுமொழி உண்டு; உண்மைதான். அவற்றில் காணப்படும் கரையத்தக்க நார்ப் பொருள்களான இன்னுலின் (Innulin), பெக்ரின் (Pectin), அல்ஜீனிக் அமிலம் (Algenic acid) என்பவை எமது உடலின் கொலஸ்திரோல் அளவைக் குறைத்து உயர்குருதி அமுக்கங்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றன. கரையாத நார்ப் பொருள்களான செலுலோசு (Cellulose), அரைச் செலுலோசு (Hemicellulose) போன்றவை பெருங்குடலில் நீரின் மீள அகத்துறிஞ்சலைக் குறைத்து மலச்சிக்கலிலிருந்து நிவாரணம் அளிக்கின்றன.

பழங்களில் அதிகமானளவு எதிர்ப்பு ஒக்சியேற்றங்களான (Anti oxidants) Poly Phenotic Flavanoid, Vitaminc, Anthocyanin காணப்படுவதால் அவை இழையங்களின் ஒட்சியேற்றங்களைத் தடுத்து புற்று நோய்களிலிருந்து பாதுகாப்புத் தருவதுடன், உடலின் நிர்ப்பீடன அளவையும் பேணுகின்றன. மரக்கறிகள் மற்றும் தானியங்களுடன் ஒப்பிடுகையில் பழங்கள் உயர்ந்தளவு Anti Oxidants பெறுமானத்தைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது நாம் குறிப்பாக நாவல்பழத்தைப் பற்றிப் பார்ப்போம். இதனுடைய தாவரவியற் பெயர் Syzgium Cumini ஆகும். இவை தெற்காசிய மற்றும் சில கிழக்காசிய நாடுகளில் பரவலாகக் காணப்படும். நாவல் பழத்தினுடைய போசனைக் கூறுகளையும் அவற்றின் போசனைப் பெறுமானத்தையும் நோக்கினால், 100 கிராமுக்கு,


சக்தி (கலோரி -60 kcal
காபோவைதரேட்டு - 14 g
புரதம் - 0.99 g
கொழும்பு- 0.23g
நார் பொருள்கள்-0.6g
விற்றமின் B - Complex 032 mg
விற்றமின் C - 11.5 mg
கல்சியம் - 11.65 mg
இரும்பு -1.41 mg
மக்னீசியம் - 35 mg
பொஸ்பரஸ்- 15.6 mg
பொட்டாசியம்-55 mg

ஆகக் காணப்படுகின்றது. இவற்றினாலான மருத்துவக் குணங்களைச் சற்று நோக்கினால், பிரதானமாக நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் நாவல்பழம் பெரும் பங்காற்றுகின்றது என்று எம்மில் சிலர் அறிவர்.



தற்போது எமது பிராந்தியங்களில் தொற்றா நோய்கள் (Non Communicable disease) அதிகரித்து வருவதனால் அதனால் ஏற்படும் சுகாதரச் செலவுகளும் இழப்புகளும் அதிகரித்தே காணப்படுகின்றன. நாம் இயற்கையுடன் ஒன்றித்து நற்சுகாதாரத்தை பேணி வாழும் தருணங்களில் இவ்வாறான இழப்புக்களை பெருமளவில் குறைக்கலாம். இதற்கு உதாரணமாகவே மேற்கூறப்பட்ட நாவல் பழத்தையும் அது சார்ந்த நன்மைகளையும் நோக்கலாம்.

A.N. முகம்மது சன்பர்
4 ஆம் வருட மருத்துவ மாணவன்,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# மேனி 'மெய்' தானா?

பொய்யாமொழிப் புலவரினால் 'மெய்' என்று சொல்லப்பட்ட மேனி, உண்மையிலேயே 'பொய்' ஆகி, சாம்பல் புழுதியாகி, புதைகுழிக்கும் போய்க்கொண்டிருக்கும் இந்த வேளையிலே மேனியை மெய் என்று சொல்வதிலும் பார்க்க 'பொய்' என்று சொல்லுவது கூடப் பொருத்தமாய் இருக்குமோ? என்று எண்ணத் தோன்றுகிறது.

இரவுகள் கூட பகல்போல் ஆகி பந்தல் போட்டு திருவிழா காணும் கோயில்கள் இருந்த ஊரெங்கும் சாமத்திலும் களைகட்டும் சாராயக் கடைகள் முளைவிட்டமை எப்படி? படித்துப் பெயர் எடுத்த பரம்பரையில் உதித்தவர்கள் குடித்து குடிமுழுகிப் போகத் துணிந்தது எப்படி? இந்தக் கடைகளால் பொய்த்துப் போய்க்கொண்டிருக்கும் மேனிகள் எத்தனை? வாகனங்கள் புகையூதக்கூடாது என்று எத்தனை எத்தனை தடைகள் எல்லாம் போட்டோம். ஆனால் வாய்கள் புகையூத வாங்கிப் புகைப்பதற்கு எத்தனை கடைகள் போட்டு வைத்திருக்கிறோம்? உயிர் குடிக்கும் சிகரெட்டை வாங்கவும் விற்கவும் தடைபோட எமக்கு நாதி இல்லாமல் போனது ஏன்? புகையில் கருகும் மேனியைக் காப்பாற்றிக் கொள்ள எமக்குத் துப்பில்லாமல் போனது ஏன்?

உடல் ஊதினால் நோய் தேடி வரும் என்று தெரிந்திருந்தும் உடல் ஊதித்திரியும் உடம்புகள் எத்தனை? புகை ஊதினால் உடம்பே புகையத்தொடங்கும் என்று அறிந்திருந்தும் புகையூதித்திரியும் வாய்கள் எத்தனை?

அடியாத மாடு படியாது என்று நாம் அடித்துப் படிய வைத்த மாடுகள் எத்தனை? அடிக்காத பிள்ளை படிக்காது என்று நாம் அடித்துப் படிப்பித்த பிள்ளைகள் எத்தனை? மருந்து அடிக்காத பழம் பழுக்காது என்று நாம் அடித்து பழுக்க வைத்த பழங்கள் எத்தனை? எதற்கும் அடிதான் மருந்து என்றால் நாம் மெய்யை, மெய்ப்பொருளை உணருவது எப்பொழுது? பொய்கள் அரசாளும் பூமியிலே எமது 'மெய்'யை நிலைநிறுத்த நாம் என்ன செய்யவேண்டும் என்று சிந்திக்க வேண்டி இருக்கிறது. உடம்பு என்ற மெய்யையும் ஆன்மா என்ற உயிரையும் ஆரோக்கியமாக ஒட்டவைக்க என்ன செய்ய வேண்டும் என்று எல்லோரிடமிருந்தும் ஆலோசனைகள் வந்தவண்ணமே இருக்கின்றன. இதில் யார் சொல்வதைக் கேட்பது? எது உண்மை? பக்கத்துவீட்டு அம்மா சொல்வது மெய்யா? டாக்குத்தர் ஐயா சொன்னது பொய்யா? முன்வீட்டு அம்மம்மா செய் என்று சொன்னதை செய்யாமல் விடலாமோ? விளம்பரங்களை மெய்யென்று நம்பவோ?

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்ற அருள்வாக்கியம் புரியாமல் போனதால், பல மெய்கள் பொய்த்துக் கொண்டிருக்கின்றன.

தினமும் பிணியுற்று, அடிபட்டு, வெடிபட்டு, சுடுபட்டு காணாமலும் போய்க்கொண்டிருக்கும் உடம்புகள் 'மெய்' என்று சொல்ல எப்படி மனம்வரும்? மெய்களெல்லாம் தோல்வி கண்டு துவண்டு போவது ஏன்? தோல்வி மனப்பான்மையில் நஞ்சருந்தி மடிந்து போகும் மனிதர்கள் தான் எத்தனை?

யேசுநாதரின் மெய் சிலுவையில் அறையப்பட்ட பொழுதுகூட உண்மை மடிந்துவிட்டதாக யாரும் கருதவில்லை. தோல்வி போன்ற அந்த தோற்றப்பாடுதான் பின்னர் பெருவெற்றிக்கு வழிசமைத்தது. நம்பிக்கையுடன் எம் மெய்களை காப்பாற்ற என்ன செய்யப்போகிறோம்? உடல், உள, சமூக, ஆன்மிக நன்னிலை என்ற மெய்யின் மெய்ப்பொருளை எங்கே தேடப்போகிறோம். இது சம்பந்தமாக சிந்திக்கவும் செயற்படவும் நிறைய இடம் இருக்கிறது.



சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களின் கல்வி நிலையை உயர்த்த தேசிய கல்விக் கொள்கையில் இடம் வேண்டும்

சமூகத்தின் மாறி வருகின்ற தேவைகளை ஈடுசெய்ய வல்ல, இசைவுறக்கூடிய விரிவான கல்விக் கொள்கையை வகுப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன் பொருட்டு ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்கென, தேசிய கல்வி ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

நாட்டின் கல்விக் கொள்கையை அடிக்கடி மாற்றிக் கொள்வதைத் தவிர்ப்பதற்கும், நீண்ட காலப் பகுதிக்கு நிலைத்துப் பயன்தரக்கூடிய கொள்கையை வகுப்பதற்கும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. முழுமை அடைந்த வகையிலான ஒரு புதிய கல்விக் கொள்கையை வகுப்பது, புதிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள தேசிய கல்விக் கொள்கையைப் பகுப்பாய்வு செய்து, தேவையுறும் பட்சத்தில் அதில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்தும் ஆணைக்குழு ஜனாதிபதிக்குப் பரிந்துரைகளை வழங்கும்.

பிரதேச ரீதியில்-மட்டத்தில்-பாடசாலைகள் இடையே நிலவும் சமம் இன்மையைக் குறைப்பதற்குத் தேவையான வழிமுறைகளையும் ஆணைக்குழு ஆராய்ந்து பரிந்துரை செய்யும்.

அனைத்து மக்கள் பிரிவினரதும் மாணவர்களது கலாசார, சமய ரீதியான தேவைகளைக் கல்வியின் ஊடாக நிறைவேற்றுவது குறித்தும், அதற்கான நடவடிக்கைகள் மற்றும் தேவைப்படும் பட்சத்தில் சட்ட ரீதியான செயற்பாடுகள் குறித்தும், விசாரித்து ஆராய்ந்து ஆணைக்குழு பரிந்துரைகளை வழங்கும்.

கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள், நாட்டின் கல்வித்துறை மேம்பாட்டில் அக்கறை கொண்டவர்கள் தமது முன்மொழிவுகளை தேசிய கல்வி ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்து மூலமான ஆலோசனைகளை உன்னிப்புடன் படித்தறியும் ஆணைக்குழு, தேவைப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துக் கலந்துரையாடிக் கருத்துப் பரிமாறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது தமிழ்ப் பிரதேசங்களின் கல்வி மற்றும் துறைசார் பிரிவினர், தேசிய கல்வி ஆணைக்குழுவுக்குத் தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கத் தயக்கம் காண்பிக்கக் கூடாது.

எந்தத் திட்டங்களும் மேல் மட்டத்திலிருந்து திணிக்கப்படாமல், குறிப்பிட்ட துறைசார்ந்த அடிமட்டத்தினரின் எதிர்பார்ப்புகளை உள்வாங்கிப் பகுத்து அறிந்து செயற்படுத்தினால் மட்டுமே, எதிர்பார்க்கப்படும் பலனைத் தரும். அவ்வழி சென்றால் மட்டுமே பாதிப்புகளையும் குறைபாடுகளையும் தவிர்க்க முடியும்.

எமது நாட்டின் தேசிய தேவைக்கு ஏற்பவும், அதேவேளை, அனைத்துலக போக்கிற்கு ஏற்ற வகையிலும், அடுத்து வரும் தசாப்தத்திற்கான கல்விசார் திட்டமிடல் அவசியம். அதனை நாடித் தேடும் பணியில் அரசு ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அந்த வகையில், புதியனவும் புதுமையானதுமான அணுகுமுறையும் அதனை நாடிய உத்திகளும் கைக்கொள்ளப்படுவது மிகப் பிரதானம். அவசியம், தவிர்க்கப்பட முடியாதவை.

தமிழ்ப் பிரதேசங்களின் தனித்துவமான, விசேட தேவைகளை அவை சார்ந்த எதிர்பார்ப்புகளை மிக ஆழமான முறையில் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டிய முழுப் பொறுப்பும் எமது கல்விப் புலத்தைச் சார்ந்தவர்களதும் கல்விமான்களினதும் தட்டிக் கழிக்க முடியாத பொறுப்பாகும்.

அதேவேளை, தமிழ்மொழி மூலமான கல்வி மேம்பாட்டுக்கான கருத்துக்களை ஒப்பாசாரத்துக்கு கேட்டறிந்துவிட்டு, அவற்றை குறுகிய அரசியல் இலாபங்களுக்காக, தமது ஒவ்வாத இலக்குகளை அடைவதற்காகப் புறந்தள்ளாது செயற்படுவது மிக முக்கியமானது; அவசியமானது.

ஓர் இனத்தையும் அது வாழும் நாட்டையும் உயர்த்தும் சக்தி, மிகப் பெரும் அளவில் கல்விக்கே உண்டு. கல்வியே கருத்தனம் என்று எமது முந்தையர் சொன்னதை மறந்துவிடலாகாது.

# பொதுநலவாய மாநாடு: குழப்பத்தில் தமிழகம்

காசிநாதன்

இலங்கையில் நடை பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்பது குறித்து தமிழக காங்கிரஸ் கட்சிக்குள் ஆளுக்கொரு விதமாக கருத்துச் சொல்லி சண்டைபோட்டுக் கொள்கிறார்கள். அந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமா? வேண்டாமா? என்பதில் அக்கட்சியின் தமிழக தலைவர்களுக்கு இடையில் பெரும் குழப்பமே நீடிக்கிறது. தமிழர் உணர்வுகளும் பாதிக்கப்படாமல், மாநாட்டில் பங்கேற்பதால் சிக்கல் வராமல் கருத்துச் சொல்லத் துடிக்கும் காங்கிரஸ் தலைவர்களால் ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்க முடியவில்லை.

தமிழகத்திலிருந்து, மத்தியில் உள்ள காங்கிரஸ் அமைச்சரவையில் இருப்பவர்களில் முக்கியமானவர் நிதியமைச்சர் சிதம்பரம். அவர் இது பற்றி எந்தக் கருத்தும் வெளியிடாமல் இருந்து வருகிறார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சிதம்பரம் தான் குழப்புகிறார் என்று தமிழகத்திலுள்ள அமைப்புகள் எழுப்பும் புகார்களைத் தவிர்க்கவே அவர் அமைதி காக்கிறார். அது மட்டுமின்றி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் களுக்கு எதிராக இந்தியா இடம் மத்திய அரசு செயற்படுகிறது என்ற பரப்புரை அவர் போட்டியிட்ட தொகுதியான சிவங்கையைத் தீவிரமாக முற்றுகையிட்டது. நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான். இயக்குநர் பாரதிராஜா என்று பல்வேறு தமிழர் ஆதரவு இயக்கங்களின்தலைவர்கள்எல்லாம் சிவகங்கைக்குப் படையெ டுத்தனர். இதில் பாதிக்கப்பட்டது சிதம்பரம்தான்.

### தேர்தலை இலக்கு வைத்த கருத்துக்கள்

இப்போது வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், மீண்டும் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியிலேயே போட்டியிட விரும்புகிறார் நிதியமைச்சர் சிதம்பரம். அதற்காக வாரத்தின் கடைசி நாள்களில் கண்டிப்பாக அவர் தொகுதிக்கு வருகிறார். தொகுதி மக்களைச் சந்திக்கிறார். இதுவரை தொகுதியில் அவர் மேற்கொண்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்து தனியாகப் புத்தகமே வெளியிடும் நிலைக்கு அவர் வந்திருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஏதாவது கருத்துச் சொல்லி, தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர் ஆதரவு இயக்கங்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டாம் என்றே அவர் கருதுகிறார். அதனால் தானோ என்னவோ, இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியாவோ அல்லது இந்தியப் பிரதமரோ பங்கேற்பது குறித்து இதுவரை கருத்து எதுவும் அவா சொல்லவில்லை.

ஆளும் காங்கிரஸ் சாரிபில் அவர் சொல்லும் கருத்து மட்டுமே தமிழகத்தைப் பொறுத்தவரை முக்கியமான கருத்தாகக் கருதப்படும். ஏனென்றால் மத்திய அரசின் முக்கிய கொள்கை முடிவுகளில் அவருக்குப் பெரும் பங்கு இருக்கிறது என்றே தமிழக அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி, இலங்கைத் தமிழர் ஆதரவு இயக்கங்களும் நினைக்கின்றன. தியாகு போன்றவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தது பற்றிக் கூட சிதம்பரம் எந்தக் கருத்தும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் எப்போதும் அமைதியாக இருக்கும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் இப்போது அடிக்கடி கருத்துச் சொல்லுகிறார். அதுவும் குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினை, மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினை, இப்போது பொதுநலவாய மாநாட்டுப் பிரச்சினை எல்லா வற்றிலும் சற்றும் தயங்காமல் கருத்துச் சொல்லி வருகிறார். வாசனது கருத்து தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர் ஆதரவு இயக்கங்களின் கருத்துக்களைப் போலவே வெளிப்படுகின்றன. குறிப்பாக பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்காத நாடுகள் தனிமைப்படுத்தப்படும் என்று இலங்கைத் துாதுவர் காரியவாசம் கூறிய கருத் துக்கு தமிழகத்தில் கடும்எதிர்ப்புக் கிளம்பியது. இந்தியாவில் இருந்து கொண்டே இப்படி கருத்துச் சொல்லலாமா என்ற கேள்விக் கணைகள் பிறந்தன. இலங்கை தூதரின் கருத்தை கடுமையாக கண்டித்தார் ஜி.கே. வாசன். அதுமட்டு மின்றி தமிழர்களின் உணர்வுகளை மதித்துப் பிரதமர் முடிவு எடுப்பார் என்றும் கூறினார். பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்பது தான் வாசனின் நிலைப்பாடு.

### காரியவாசத்தின் பேச்சுக்கு ஒத்துப் போகும் நாச்சியப்பன்

இவர்கள் இப்படியிருக்க, இன்னொரு இணை அமைச்சரான சுதர்சன நாச்சியப்பனோ மாற்றி வாசிக்கிறார். இலங்கைத் தமிழர் நலன் காக்க, அவர்களின் பொருளாதாரம் மேம்பட இந்தியா பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று அடித்துப் பேசியிருக்கிறார் அவர். இந்தியா பெயரளவுக்குக் கூட பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்று தமிழக சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை காங்கிரஸ் கட்சி ஆதரித்துள்ளது. சட்டசபையில் அப்படி ஆதரித்த கட்சியின் அமைச்சரான சுதர்சன நாச்சி யப்பன் வெளியில் இப்படி மாற்றிப் பேசுகிறார் என்ற குற்றச்சாட்டு அவர் மீது கிளம்பியிருக்கிறது. தமிழ்நாட்டு காங்கிரஸ் தரப்பு ஒரு கருத்தைச் சொல்கிறது. மத்திய அரசின் அமைச்சர் ஒரு கருத்தைச் சொல்கிறார். காங்கிரஸ் அமைச்சர்கள் வெவ்வேறு கருத்தைச் சொல்கிறார் கள். அதனால்தான் தி.மு.க. தலைவர் கருணாநிதியே, சுதர்சன நாச்சியப்பன் இலங்கை தூதர் காரியவாசம் போல் கருத்துச் சொல்கிறார். இது சரியல்ல என்று சாடியிருக்கிறார்.

### இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகப் பேசும் நாராயணசாமி

ஆனால் ஆரம்பம் முதலே பிரதமர் அலுவலக அமைச்சராக இருக்கும் நாராயணசாமி மட்டும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகவே கருத் துச் சொல்லி வருகிறார். பொதுநல வாய மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி தமிழர்களின் உணர்வுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு உரிய நேரத்தில் பிரதமர் முடிவு எடுப்பார் என்று கூறி வருகிறார். தி.மு.க. தலைவர் கருணாநிதி கூட அடிக்கடி நாராயணசாமி மற்றும் வாசன் போன்றோரின் கருத்துக்களை மேற்கோள் காட்டியே இந்த விடயங்களில் கருத்துச் சொல்லி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. நாராயணசாமியைப் பொறுத்தமட்டில் அவர் புதுவை மாநிலத்தைச் சேர்ந்தவர். அங்கு இலங்கைத் தமிழர் ஆதரவு அலை தமிழகத்தில் உள்ளது போல் தீவிரமாக இல்லை. அதே சமயம் அவர் தமிழகத்தின் நாடாளுமன்றத் தொகுதிகளில் இருந்து போட்டியிடப் போவதில்லை. அவருக்கு புதுவையில் ஜெயிக்க தி. மு.க. அல்லது அ.தி.மு.க. கூட்டணி தேவை. அந்தக் கூட்டணி அமைவதற்கு ஏற்ற வகையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கருத்துக்களை சொல் லிக் கொண்டிருப் போம் என்பது மட்டுமே நாராயணசாமியின் கவலை. அதனால்தான் அவர் இலங்கைத் தூதர் கரியவாசத்தின் கருத்துக்கு பதில் சொல்லி என் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை என்ற கடுமையாகச் சாடியுள்ளார்.

பொதுநலவாய மாநாடு குறித்து தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தலைவர்கள் குழம்பிப் போய்த் தவிக்கிறார்கள். திடமான, தீர்க்கமான கருத்தைச் சொல்ல முடியாமல் திண்டாடுகிறார்கள். அனைத்துக் கட்சிகள் மத்தியிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையை மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், இது வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி சேருவதற்கு பெரும் சிக்கலை தோற்றுவிக்கும். அந்தச் சிக்கலில் இருந்து தப்பிக்கவே ஒவ்வொரு காங்கிரஸ் தலைவர்களும் வெவ்வேறு விதமாக இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் கருத்துச் சொல்கிறார்கள். இலங்கைத் தூதர் கரியவாசம் கூறியிருப்பது போல், இந்தியா தனிமைப்படுகிறதோ இல்லையோ, பொதுநலவாய மாநாட்டுப் பிரச்சினையில் தமிழக காங்கிரஸ் கட்சி தனிமைப்படுத்தப்பட்டு நிற்கிறது. அதை தி.மு.க. வின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான துரைமுருகனே வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.!

> இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சிதம்பரம்தான் குழப்புகிறார் என்று தமிழகத்திலுள்ள அமைப்புகள் எழுப்பும் புகார்களைத் தவிர்க்கவே அவர் அமைதி காக்கிறார். அது மட்டுமின்றி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இந்தியா செயற்படுகிறது என்ற பரப்புரை அவர் போட்டியிட்ட தொகுதியான சிவங்கையை தீவிரமாக முற்றுகையிட்டது. நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான். இயக்குநர்பாரதிராஜா என்று பல்வேறு தமிழர் ஆதரவு இயக்கங்களின் தலைவர்கள் எல்லாம் சிவகங்கைக்குப் படையெடுத்தனர். இதில் பாதிக்கப்பட்டது சிதம்பரம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பத் வங்கியின் மரம் நடுகைத் திட்டம்



இந்த மரம் நடுகை செயற்றிட்டம் திருநெல்வேலிக் கிளையின் முகாமையாளர் அ.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

சம்பத் வங்கியின் திருநெல்வேலிக் கிளையினர் சமூகப் பொறுப்புடன் கூடிய மரம் நடுகைத் திட்டத்தைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலி கிழக்குப் பகுதியில் ஆரம்பித்து வைத்தனர்.

இந்த மரம் நடுகை செயற்றிட்டம் திருநெல்வேலிக் கிளையின் முகாமையாளர் அ.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சங்கானை பிரதேச சபையின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமார் மற்றும் சமூக ஆர்வலர் ஆசிரியர் அசோகன், பிரதேச மக்கள், வங்கி ஊழியர்கள் கலந்து சிறப்பித்தனர்.




உலக சிக்கன தினத்தின் 89 ஆவது ஆண்டு நிறைவை சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக் கிளையினர் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் அனுஷ்டித்தனர். வங்கிக் கிளை உதவி முகாமையார் க.அங்கவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரி அதிபர் க.அருந்தவ பாலன் வங்கி உத்தியோகத்தர் சுமன் ஆகியோர் சிக்கன தினம் தொடர்பாக உரையாற்றினர். (த-9)

# சாவகச்சேரி மக்கள் வங்கியின் விசேட சிறுவர் சீட்டிழுப்புக்கள்

தென்மராட்சி, நவ 3

மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை, கொடிகாமம், கைதடி சேவை நிலையங்கள் ஆகியவற்றில் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி ஒக்ரோபர் மாதத்தில் சிறுவர் சேமிப்புக் கணக்குகளாக "சிசு உதான", "இசுறு உதான" ஆகியவற்றை ஆரம்பித்தவர்களுக்கான விசேட சீட்டிழுப்பு கடந்த 26 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மக்கள் வங்கியின் யாழ்.உதவிப் பிராந்திய முகாமையாளர் நா.நாகேஸ்வரன் ஆகியோர் கூட்டாக அதிர்ஷ்டசாலிகளைத் தெரிவு செய்தனர்.

(த-9)

# ஜோன் கீல்ஸ் - வோல்ட் விஷன் கூட்டிணைந்து முல்லைத்தீவில் அபிவிருத்திப் பணிகள்

John Keells Holdings

இலங்கையின் வடபகுதியிலுள்ள சமூகங்களின் வாழ்வாதாரங்களுக்கு புனாவாழ்வளித்து, அவற்றை தரமுயாத்தும் முகமாக கூட்டுமுயற்சியொன்றை ஜோன் கீல்ஸ் அறநிறுவனம் மற்றும் வேர்ல்ட் விஷன் லங்கா அமைப்பு ஆகியன அண்மையில் ஆரம்பித்துவைத்துள்ளன. பெண்களின் தொழில்முயற்சி வாய்ப்புக்களை மேம்படுத்தல், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்.யுவதிகளின் நன்மைக்காக உட்கட்டமைப்பு மற்றும் திறமைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பாடசாலைகள் மற்றும் சமூகங்களுக்கு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல் அடங்கலாக வாழ்வாதார உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்த கூட்டுமுயற்சியினூடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் அமுலாக்கம் செய்யப்படவுள்ளன.

ஜோன் கீல்ஸ் கூட்டு நிறுவனங்களின் வாத்தக சமூக நலன்புரிப் பிரிவே ஜோன் கீல்ஸ் அறநிறுவனமாகும்.

அதன் பிரதான நோக்கங்களுள் ஒன்றாக உள்ள சமூக மற்றும் வாழ்வாதார அபிவிருத்தியின் கீழ் வறுமையை ஒழிக்கும் முகமாக, கிராமமட்டத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இணைந்து நிலைபேற்றியலுடன், ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டு, அமுலாக்கம் செய்யப்படுகின்ற ஒரு பிரதான முன்னெடுப்பே கிராம தத்தெடுப்புச் செயற்றிட்டமாகும்.

அனுராதபுர மாவட்டத்திலுள்ள ஹல்மில்லாவ மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள மங்களகம ஆகிய கிராமங்கள் இதற்கு முன்னா கிராம தத்தெடுப்பு செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்திக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இலங்கையின் வடபகுதியில் மிக நீண்ட காலமாக தொழிற்பட்டுவருகின்ற வோல்ட் விஷன் லங்கா அமைப்பு மீளவும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்புகின்ற சமூகங்கள் மீண்டும் வாழ்வை ஆரம்பிப்பதற்கு உதவி, அவாகளுக்கு வாழ்வாதார உதவிகள், முன்பள்ளிச் சிறுவாகளுக்கான ஊட்டச் சத்து ஊட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், கல்வித்துறைக்கான உதவிகள், அதன் உளவியல் ஆரோக்கியச் செயற்திட்டத்தின் மூலமாக உளவியல் ஆதரவு மற்றும் அனாத்தங்கள் மூலமான ஆபத்துக்களைக் குறைக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளது.

நிலைபேற்றியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியில் உள்ள சமூகங்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு இரு அமைப்புக்களும் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை இந்த கூட்டிணைவு ஏற்படுத்தியுள்ளது.

நீண்ட மதிப்பீடு மற்றும் அனுமதி செயல்முறையின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளா பிரிவிலுள்ள இரணைப்பாலை மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புதுமாத்தளன் ஆகிய இரு கிராமங்கள் தொவுசெய்யப்பட்டன.

இச்செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் மீனவர் சங்கங்களின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மீன்பிடி வலைகளும், உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன், மாதா கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினாகளுக்கு உதவும் முகமாக சேமிப்புத் திட்டமொன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், துவிச்சக்கரவண்டிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

இச்செயற்பாடுகள் பூர்த்தியடைந்தமையைக் குறிக்கும் முகமாக இரணைப்பாலையில் இடம்பெற்ற கையளிப்பு நிகழ்வில் முல்லைத்தீவு அரசாங்க அதிபரான என். வேத நாயகம், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்புப்படை பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் கிராம சமூகங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதற்கிடையில் முதற்கட்டப் பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொவுசெய்யப்பட்ட இரு கிராமங்களில் அமைந்துள்ள பாடசாலைகளான, இரணைப்பாலை ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் மற்றும் மாத்தளன் ரோமன் கத்தோலிக்க தமிழ் பெண்கள் பாடசாலை ஆகியவற்றில் இரட்டைத் தொகுதி மலசலகூடங்கள் நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்டதுடன், புதுமாத்தளனிலுள்ள பொதுமக்கள் உபயோகிக்கும் கிணறுகளை துப்புரவாக்கி, புனருத்தாரணம் செய்யும் பணிகளும் அடங்கியுள்ளன. இப்பணிகளும் புர்த்திசெய்யப்பட்ட பின்னர் குறிப்பிட்ட பயனாளிகளிடம் கையளித்துவைக்கப்பட்டன. இச்செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மேலதிக அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்பட்டு வருகின்றன.

இரு நிறுவனங்களுக்கும் இடையிலான பாரிய கூட்டிணைப்பிற்கு இச்செயற்திட்டம் வழிகோலியுள்ளதுடன், தேவைகள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடனான இடைத்தொடர்பாடல்கள் மூலம் இனங்காணப்பட்ட முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்த தேவையான நிதியுத வியை ஜோன் கீல்ஸ் அறநிறுவனம் வழங்கியுள்ளது. குறிப்பாக மதிப்பீடு, நடைமுறை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையானகள ஆதரவை வேர்ல்ட் விஷன் லங்கா நிறுவனம் வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2014

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2014ஆம் திகதி முதல் 31.12.2014ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | ரூபா 500.00 |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | 04.11.2013 - 18.11.2013 மு.ப. 10.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | 18.11.2013 நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | 18.11.2013 பி.ப 2.30 மணிக்கு |

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.11.2013ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

குறிப்பு :

01. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமார்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித்தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான 8 மாத காலப் பகுதிக்குள் 2014 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.
02. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறும்தியின் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு)நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம், மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5' X '5) நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
03. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00 உம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடாது.
04. சபையின் கடைகளில் இறைச்சி / கருவாடு / கோழி ஆகிய பொருள்கள் விற்பனை செய்யும் உரிமையாளார்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.
05. சுப்பிரமணியம் பூங்கா சிற்றுண்டிச்சாலை, யாழ் கச்சேரியடி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை என்பனவற்றை குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.
    1. சிற்றுண்டிச்சாலை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00மணிவரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.
    2. சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்தவேண்டும்.
    3. மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூ.15000.00 ஐயும் உடன் செலுத்துதல் வேண்டும்.
06. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% VAT 2% NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
07. கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ். மாநகர சபைக்கே உரியது.
09. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

### இறைச்சிக்கடை குத்தகை 2014

| தொ. இல. | இறைச்சிக்கடை | கடை இல. | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.வ.வரியும் நீங்கலாக |
|---|---|---|---|---|
| 01 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 125,000.00 |
| 02 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 54,500.00 |
| 03 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 112,000.00 |
| 04 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 218,500.00 |
| 05 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 70,000.00 |
| 06 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 70,000.00 |
| 07 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 330,000.00 |
| 08 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 78,000.00 |
| 09 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 105,500.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 105,500.00 |
| 11 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 143,000.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 548,000.00 |
| 13 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 543,500.00 |
| 14 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 105,000.00 |
| 15 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 295,000.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 451,000.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 93,500.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 93,500.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 200,000.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 93,500.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 93,500.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 93,500.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 93,500.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 93,500.00 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 200,000.00 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 66,500.00 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 13,500.00 |
| 28 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 266,500.00 |
| 29 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 30,240.00 |
| 30 | குருநகர்மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 477,000.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 522,000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 383,000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 379,000.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 472,500.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 379,000.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 302,500.00 |
| 37 | முஸ்லீம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 110,000.00 |

### பொதுச்சந்தைக் குத்தகை 2014

| தொ. இல. | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.வ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,652,500.00 |
| 02 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,298,000.00 |
| 03 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 1,400,000.00 |
| 04 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 1,263,000.00 |
| 05 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 577,500.00 |
| 06 | அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 58,000.00 |
| 07 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 165,500.00 |
| 08 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 69,500.00 |
| 09 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 86,000.00 |
| 10 | பஸ்நிலைய கடைகளுக்கு கிழக்கு பக்கமாகவுள்ள து.வி.வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 250,000.00 |
| 11 | புங்கன் குளம் சந்தை | 2,000.00 | 9,000.00 |
| 12 | யாழ். கச்சேரி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 60,000.00 |

மேலதிக விவரங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தொ.பே. 071 862 8576

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
மாநகர முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

**மாநகரசபை அலுவலகம் - யாழ்ப்பாணம்.** (சி: 13520) (46.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விளம்பரங்கள்

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் 1½ (ஒன்றரை) பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 712 0968 (39547)(7.6.3)

### வாகனம் விற்பனைக்கு
இசுசு டபிள் கப் ISUZU DOUBLECAB 1988 நீலம் AC யுடன் நிசன் வனற் NISSAN VANETTE 1985வெள்ளை சிறிய மினி வான் விற்பனைக்கு. அத்துடன் வவுனியாவில் வீடும் ஒன்று வாடகைக்கு உள்ளது. (29832)(6.3.4)
தொடர்பு: 075 720 6760

### வேலைக்குப் பெண்கள் தேவை
கீழ்வரும் வேலைகளுக்கு 18-25 வயதுக்குட்பட்ட பெண்கள் தேவை.
செயலாளர், கணினி ரைப்பிஸ்ற், கணக்காளர், அறைகள் பராமரிப்பாளர்
உங்கள் விவரங்களை சுயவிவரக் கோவையுடன் படம், தொ.பே.இலக்கம் என்பவற்றுடன் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்
புளூ ஒஷன் றிசோட், அல்லப்பிட்டி.
தொடர்பு: 077 835 0478 (39712)(12.3.6)

### மணமகள் தேவை
யாழ்.காரைநகர் இந்து கௌரவ குடும்பம் உத்தரம் அரச சேவையிலுள்ள பட்டதாரி மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. பொருத்தமானவர்கள் தொலைபேசி இலக்கத்துடனும் ஜாதகக் குறிப்புடனும் தொடர்பு கொள்ளவும். (39707)(7.6.3)
விளம்பர இல. 4473, C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### வீடு வாடகைக்கு
கிளிநொச்சி நகரிலிருந்து 500mஇக்கு அருகில் இரத்தின புரத்தில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. கொழும்பு மாதம்பிட்டியில் நவீன வசதிகளுடன் கூடிய மாடி வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படும். (வீட்டு உபகரணங்களுடன்)
தொடர்பு: 078 362 1172 (39711)(7.6.3)

### கார் விற்பனைக்கு
மருத்துவரின் பாவனையில் மட்டும் உள்ள Toyato Yaris (MANUAL) KR - XXXX Made in Japan (2011 August made) Mileage 5000km Red Colour உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 722 2468 (39568)(12.3.6)

### வீடு வாடகைக்குண்டு
கொக்குவில் சந்திக்கு அருகில் ஆடிய பாதம் வீதியில், சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு. (சிறிய குடும்பம் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 198 9968 (39592)(6.3.4)

### வீடு விற்பனைக்கு
நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தில் 2½ பரப்பில் அமைந்துள்ள சகல வசதியுடன் கூடிய புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 072 309 0343 (39671) (12.3.6)

### வேலையாள்கள் தேவை
வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை.
தொடர்பு: த.குமாரசாமி அன் சன்ஸ், 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (39540)(12.3.6)

### SITUATION WANTED
A 49 Years old degree holder in Commerce, CIMA fullyqualfied and a computer literate seeks employment in Jaffna or Northern Region. Middle east returnee, held Managerial position for several years with high Command of English.
Contact: 077 269 0423

### Walk-in-Interview
நேர்முகத் தேர்வு
நஷனல் அசட் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது துடிப்பான பேச்சாற்றல் மிகுந்தவர்களை சந்தைப்படுத்தல் திறமைக்கு ஏற்ப தேர்வு செய்ய உள்ளது
எமது நிறுவனமானது யூனியன் வங்கியின் உப நிறுவனமும் DFCC வங்கி மற்றும் Ennid Capital (Pvt) Limited ஆகிய நிறுவனங்களின் துணை நிறுவனமும் ஆகும்.

| | |
|---|---|
| வேலை விவரம் | முதலீட்டுத்திட்ட ஆலோசகர் |
| தகைமைகள் | G.C.E. O/L & G.C.E.A/L சிறந்த தொடர்பாடல் திறமையுடன் இருப்பது விரும்பத்தக்கது. |
| நேர்முகப் பரீட்சை | காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும். (சுயவிவரக் கோவையுடன் சமுகமளிக்கவும். |
| திகதி | 04, 05. நவம்பர் 2013 |

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் கீழ்வரும் முகவரிக்கு சமுகமளிக்கவும்
முகவரி: நஷனல் அசட் மனேஜ்மன்ட் லிமிட்டெட் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம், யாழ்ப்பாணக் கிளை, 2ஆம் மாடி, 147, 2/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
namal



சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தால் நடத்தப்பட்ட ஆசிரியர் தின நிகழ்வில் பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் செ.கிருபாரத்தினம் மற்றும் ஆசிரியர்கள். (ஒ-14)



பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் நிறுவப்பட்ட அமரர் இரத்தினசிங்கம் துரைராஜசிங்கம் ஞாபகார்த்த நிறுவனமான ஞானாலயம் திறப்பு விழாவில் அவரது மகனான லண்டனைச் சேர்ந்த சட்டத்தரணி ஆர்.டி.இரத்தினசிங்கம் தந்தையின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கிறார். (ஒ-8)



கொக்குவில், மேற்கு சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட நவராத்திரி விழாவின் போது பூசை நிகழ்வுகள் மற்றும் 'சுப்பிரமணிய பாரதி' முன்பள்ளி மாணவர்களது கலை நிகழ்வுகளும். (ஒ-14)



நல்லூர் பிரதேச செயலக கிராம அலுவலர் ஜே/110 பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் பழமரக் கன்றுகள் வழங்கப்பட்டன. (ஒ-7)



கோண்டாவில் பொது நூலகத்தால் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட 'வாழும் வரை வாசி' என்ற விழிப்புணர்வு நாடகக் காட்சிகள். (ஒ-14)



நல்லூர் பொது நூலகத்தால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருநெல்வேலி கம்பன் முன்பள்ளியில் நடத் தப்பட்ட நூலக நடமாடும் சேவை. (ஒ-14)



அண்மையில் நடைபெற்ற காரைநகர் கிழவன்காடு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் உற்சவத்தின்போது தொடர் சொற்பொழிவாற்றிய சி.உமாசுதன் பொன்னாடை போர்த்தி 'செந்தமிழ் அறிஞன்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட நிகழ்வில் ஆலயக் குருக்கள், புலவர் குமாரசாமி, ஓதுவார் இராசையா ஸ்ரீதரன். (ஒ)



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை சமூக ஆர்வலர் ஒருவர் நூலகரிடம் கையளித்தார். (ஒ-14)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பொது நூலகத்தினால் கடந்த வாரம் நூலகத்தில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் ஒரு காட்சி. (ஒ-14)




மறைந்த சிவசோதி ஞாபகார்த்தமாக நவாலியில் அவரது மகள் மு.ஜீவா வழங்கிய முதியவர்களுக்கான நிதி மற்றும் உதவிப் பொருள்களை நவாலி முருகானந்த சனசமூக நிலைய தலைவர் செல்லத்துரை மகேந்திரன் வழங்கினார். அருகில் முதியோர் சங்கத்தின் தலைவர் கி. பவுலின். (ஒ-50)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட சர்வதேச முதியோர் தின விழாவில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட வலயத் தலைவர் லயன் எஸ்.தவநாதன் முதியவர் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். அருகில் கழகத் தலைவர் லயன் த.இரவீந்திரன். (ஒ-9)





யாழ்.லயன்ஸ் கழகமும் நல்லூர் வடக்கு சனசமூக நிலையமும் இணைந்து நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய சூழலில்மரக்கன்றுகள்நடும்நிகழ்வை நடத்தின. இதில் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் , லயன்ஸ் கழக உறுப்பினர்கள், கிராம மக்கள் மற்றும் நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தினர் ஆகியோர் இணைந்து மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.



கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெற்ற வாணி விழாவில் பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்வு. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயல் நிலமில்லாத குடும்பங்களுக்கு வயற் காணிகள்

துணுக்காய் கல்விளான் கிராமத்தில் வயல் நிலமில்லாத 70 குடும்பங்களில் 35 குடும்பங்களுக்கு வயல் நிலம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மீதி 35 குடும்பங்களுக்கு காலபோக நெற் செய்கைக்கு ஏற்ற வகையில் காணி அளந்து வழங்கப்படவுள்ளதாகவும் துணுக்காய்ப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

கல்விளான் கிராமத்தில் வயல்நிலமில்லாத குடும்பங்கள் தமக்கு வயல்நிலம் வழங்கப்படுவதில் தாமதம் ஏற்படுவதாகத் தெரிவித்து வரும் நிலையில் பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (க-18)

## ஆச்சிபுரம் பகுதியில் பாடசாலை அமைக்குக

### மக்கள் கோரிக்கை

வவுனியா,நவ.3

வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் பாடசாலையொன்றை அமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


வவுனியா ஆச்சிபுரம் பழைமைவாய்ந்ததொரு கிராமமாகும். நூற்றுக்கணக்கான மாணவர்கள் இங்கு வசிக்கின்றனர். தற்போது இவர்கள் நீண்ட தூரம் நடந்து சென்று கோமரசங்குளம் பாடசாலை, முருகனூர் சாரதா வித்தியாலயம், சமணங்குளம் அ.த.க.பாடசாலை, வவுனியா இந்துக் கல்லூரி உட்படப் பல்வேறு பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். இவர்கள் மோசமான நிலையிலுள்ள வீதிகளூடாக சிரமங்களுடன் இந்தப் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். ஆச்சிபுரப் பகுதியில் பாடசாலையொன்று அமைக்கப்படுமாயின் இந்த மாணவர்களின் சிரமங்கள் குறைவடையும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அடிப்படை வசதிகள் இல்லாத, பற்றைக் காடுகளை அண்மித்த சிங்களக் குடியேற்றப் பகுதிகளில் புதிய பாடசாலைகள் உருவாக்கப்படும் நிலையில் பழைமை வாய்ந்த தமிழ்க் கிராமங்களில் பாடசாலைகள் அமைக்கப்படாமை குறித்து இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர். (க-402)

## வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள்

மன்னார், நவ.3

மன்னார் மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் விவசாயிகளின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மன்னார் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இடம்பெற்றது.



குறித்த நிகழ்வு மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திருமதி.கே.சுலோஜினி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

2ஆயிரத்து 500 ரூபாவுக்கும் குறைந்த மாத வருமானம் பெறும் வறிய விவசாய குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 11 மாணவர்களுக்கு தலா 15 ஆயிரம் பணம் வங்கியிலிடப்பட்டு கணக்குகள் குறித்த புலமைப் பரிசிலுக்கென வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின் போது கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

குறித்த நிகழ்வில் நீர்ப்பாசன தொழிநுட்ப உத்தியோகத்தர் எஸ்.தாஸ், கமநல உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-12)

## உள்ளூர் பானங்களை வழங்கவும்

### கிளிநொச்சி அரச அதிபர் யோசனை

அக்கராயன், நவ.3

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் உள்ளூரில் தயாரிக்கப் படும் பானங்களை வழங்குமாறு கிளிநொச்சி அரச அதிபர் வேண்டுகோள் விடுத்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் வைத்தே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் வெளியிடங்களில் தயாரிக்கப்படும் பானங்களே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே அரச அதிபர் இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார். கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம் என்பதால், உள்ளூரில் தயாரிக்கப்படும் பானங்கள் தொடர்பாக விவசாயிகளின் ஒரு மித்த கருத்தையே கொண்டிருந்தனர்.

தற்போது விற்பனையாகும் குளிர்பானங்களால் சிறுவர்களின் பற்கள் பாதிக்கப்படுவதாக பல மருத்துவர்கள் சுட்டிக் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## யாழ். பொது நூலகத்துக்கு முதலிடம்

யாழ்ப்பாணம்,நவ.3

மாநகரசபை ரீதியில் சிறந்த நூலக சேவைகளை வழங்கும் நூலகங்களுக்கான விருதில் யாழ். மாநகர சபையின் யாழ். பொது நூலகம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

தேசிய ஆவணமாக்கல் சபையால் வருடாந்தம் வழங்கப்படும் விருதின் அடிப்படையில் இந்த வருடம் யாழ். பொது நூலகம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் இடத்தை மொறட்டுவ மாநகர சபையின் மொறட்டுவ பொது நூலகமும், மூன்றாம் இடத்தை காலி மாநகர சபையின் மருத்துவர் றிசாட் பத்திரன பொது நூலகமும் பெற்றுக் கொண்டுள்ளன. (ஒ-14)

# மின்சாரக் கட்டணத்தை செலுத்த முடியாத நிலை

## கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி ஏ-9 வீதியில் சபையின் அனுமதி பெறப்படாது பொருத்தப்பட்ட தெரு விளக்குகளுக்கான அதியுயர் மின்சாரக் கட்டணத் தைச் செலுத்த முடியாத நிலையில் கரைச்சிப் பிரதேச சபை உள்ளதாக அதன் தவிசாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி ஜனாதிபதி ஏ-9 வீதியைத் திறந்து வைக்கும் பொருட்டுவருகைதர இருந்த வேளையில் கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அடங்கும் ஏ-9 வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கரடிப்போக்குச் சந்தி வரையான பிரதேசத்தில் அரச அதிபரின் பணிப்புரையுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 72 மின் கம்பங்கள் நடப்பட்டு சக்தி வாய்ந்த 144 மின் குமிழ்கள் பொருத்தப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் கரைச்சிப் பிரதேச சபையிடம் அதற்கான எந்தவித கோரிக்கை முன்வைக்கப்படவோ அல்லது அனுமதி பெறப்படவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர், கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்குள் ஏ-9 வீதியில் மின்சாரம் வழங்கப்படுவது பயனுள்ளதெனவும், அதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டமைக்கு அமைய வீதி மின்விளக்குகளுக்கு மாதாந்தக் கட்டணமாக ஒரு லட்சம் ரூபா செலுத்த முடியுமென்ற சபையின் தீர்மானம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மாதாந்தம் 4 லட்சத்து 50 ஆயிரம்ரூபாவுக்கான மின்சாரக் கட்டணப் பட்டியல் கிடைத்தபோது அரச அதிபர், வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் ஆகியோருக்கு அது குறித்து பல தடவைகள் எம்மால் அறிவிக்கப்பட்டது. ஆனால் எந்தவித பதிலும் இதுவரை எமக்கு வழங்கப்படவில்லை. அத்துடன் வீதி விளக்குகளை மாற்றியமைத்து மின் குமிழ்களைப் பயன்படுத்துவதற்கான திறப்புக்களோ அன்றி அவை அமைக்கப்பட்ட இடங்களோ எமக்கு அறிவிக்கப்படவும் இல்லை.

> மாதாந்தம் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவு ஏற்படும் வகையில் ஏ-9 வீதிக்கு வீதி விளக்குகள் போடு மளவுக்கு சபைக்கு வருமானம் போதாது.

இந்த நிலையில் கடந்த 2 ஆம் திகதி இலங்கை மின்சார சபையின் பொறியியலாளரால் வீதி விளக்குகளின் மின்சாரம் துண்டிக்கப்பட உள்ளது என்ற செய்தி வழங்கப்பட்டபோது அது தொடர்பாக முன் கூறியவர்களுக்கு எம்மால் அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த 3 ஆம்திகதி மின்சாரம்துண்டிக்கப்பட்டதன் பின்னரே வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எம்மிடம் திறப்புக்கள் கையளிக்கப்பட்டன. இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாதென வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்த போதும் எந்தவித பதிலும் கிடைக்க வில்லை.

மாதாந்தம் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவு ஏற்படும் வகையில் ஏ-9 வீதிக்கு வீதி விளக்குகள் போடுமளவுக்கு சபைக்கு வருமானம் போதாது. அந்தப் பணத்துக்கு கடந்த காலப் போர் அனர்த்தங்களால் சிதைந்து போன மக்களின் வாழ்வியலை முன்னேற்றும் வகையில் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதோடு கிரவல் வீதிகளையும், நூல் நிலையங்களையும் புனரமைத்து மக்களின் வாழ்க்கைக்கு உதவியளிக்க முடியும்.

எனவே எந்தவித அறிவித்தலும் இன்றி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட திட்டங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் கரைச்சிப் பிரதேச சபை பங்களிப்பு வழங்க வேண்டிய தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் என்றுள்ளது. (க)

3 மாத கால பயிற்சி நெறி அக்ஷயா பயிற்சிக் கட்டணம் 20000/= மட்டுமே

பேசியல், மேக்கப், கொண்டைகள், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடிகுட்டுதல், மேற்படி பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. ★ ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை, ★ உடல் எடை கூட்டும் குளிசை, ★ உடல் எடை குறைக்கும் பவுடர், குளிசை, கோப்பி, என்பன ★ கருவளையம், நாட்பட்ட பருக்கள், இளநரை, முடிகொட்டுதல் அனைத்துக்குமான குளிசை ★ தலைமுடி வளரச்செய்யும் ஆயுள்வேத எண்ணெய், ★ முகத்தில் உள்ள கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, தழும்பு வடுக்கள், பருக்கள், காயங்கள், மஞ்சள், வெள்ளைப் புள்ளிகள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைத்தின் கிறீம், விற்பனைக்கு உண்டு. மூலிகை வைத்தின் பேசியல் செய்து கொள்ளலாம், மேக்கப் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ★ கழுத்து கறுப்பு அகற்றும் கிறீம் பெற்றுக் கொள்ளலாம். தலைமுடி கட்டுதல், அயன்பண்ணுதல், கேவிங்செய்து கொள்ளலாம்.

பதிவு இல. 16168 077 2106155

அக்ஷயா- நாவலர் வீதி, (பிறவுண் றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில்) யாழ்ப்பாணம்.

கணித, விஞ்ஞான வகுப்புக்கள்

புலமைப்பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான (2013) தேசிய மட்ட "ஒலிம்பியாட்" தெரிவுப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

03.11.2013 ஞாயிறு பி.ப 2.00 மணி

தொடர்பு: 077 932 4094

116/2, இராசாவின் தோட்ட வீதி, நல்லூர்.

சகல விதமான மடிக்கணினிகளுக்கும் அதன் உதிரிப்பாகங்களுக்கும்

www.jaffnalaptop.com

(சி/13707)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதன் முறையாக

# PHOTOBOOKS

ஸ்ரீ லங்காவில் தயாரிக்கபபடுகிறது

- இலகுவான பாரமில்லா நிழற்பட புத்தகம்.
- பல்வேறுவிதமான முன்அட்டைகள் மற்றும் கட்டும் தெரிவுகள்.
- பரந்த தெரிவுடன் உயர்தர பரிமாணங்கள்.
- நீர் மூலம் பாதிப்பு இல்லை.
- தலைமுறையாக நீடிக்கும் அச்சு பிரதிகள்.
- கிழிக்க இயலாத புத்தகம்.
- 5"x7" தொடக்கம் 12"x17"வரை அளவுகள்.
- இதில் இரசாயன பொருள்கள் சேர்க்கையில்லாத காரணத்திலும் மற்றும் வெளிப்படுத்தாத காரணத்திலும் சூழல் நற்புடையதாகும்.

அழையுங்கள் - 011-7389721-2

Suresh:0712198108 Patrick:0777666100

அழகிய கதைகளை உருவாக்குவது அர்த்தமுள்ள உறவுகள்.
JAMPHOTO தொழில் நுட்பத்தை மட்டும் அல்ல அது இனிய காவியங்களை உருவாக்குவதைப் பற்றியது.



திருமணங்கள் - விடுமுறைகள் களியாட்டம் - குடும்ப வைபவங்கள்

Powered By hp INDIGO

JAMPHOTO

நிரந்தர அழகிய கதைகள்

எமக்கு கொடுக்கப்படும் நிழற்படங்களுக்கு பூரண அந்தரங்கமும் உத்தரவாதமும் தரப்படும்

PHOTOBOOK நிறுவனம் முதன்முறையாக யாழ்ப்பாணத்திற்கு வருகைத்தரவிருக்கிறது. நாம் 2014 தைமாதம் 17ம், 18ம், 19ம் திகதிகளில் நிகழவுள்ள JITFல் (11) இலக்க ஸ்தானத்தில் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப் பொருளைப்பற்றிய மேலதிக விபரங்கள் பெற விரும்புவோர் தைமாதம் 16ம் திகதி 4:00 மணிமுதல் 6:00 மணிவரை (ஹோட்டல் சுபாசில்) நடை பெறவிருக்கும் விழிப்புணர்வு கருத்தரங்கில் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம். கீழ் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் உங்களின் பங்கேற்றலை உறுதிப்படுத்துங்கள்.

கீழ் இருக்கும் படிவத்தை நிரப்பி மார்கழி மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் ART WORK க்குடன் எமக்கு அனுப்புபவருக்கு ஒரு PHOTOBOOK இலவசமாக கொடுக்கப்படும்.

CUSTOMER NAME: ..................
STUDIO NAME: ..................
TEL NUMBER: ..................
ADDRESS: ..................

RETURN ADDRESS
Jam Photo (Pvt) Ltd
91, Galle Road, Colombo 4, Sri Lanka
Tel: +94 11 7389721-22 / +94 11 4933481 Fax: +94 11 2055129
Email: info@jamphoto.lk Web: www.jamphotobooks.com

(C/13536)(10.6.3)

## கிராமியக் கலை விழா

மாங்குளம், நவ.3

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கிராமியக் கலைவிழா இடம்பெறவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிராமப் புறங்களில் கிராமியக் கலையை வளர்த்தெடுக்கும் முகமாக நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் கிராமியக் கலைவிழா நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வவுனியா வடக்குப் பிரதேச செயலர் கே.பரந்தாமன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 5 ஆம் திகதி பட்டிக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் இதனை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் கிராமிய நடனம், நாட்டார் பாடல்கள், கோலாட்டம் போன்ற கிராமிய நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-422)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ 1976 உத்தரட்டாதி 4ஆம் பாதம் கிரக பாவம் 30¼ உடைய அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை.
(39716)(10.14) தொடர்பு: 077 6080926

**வைத்தியம்**

சுவாமி ஆயுர்வேத ஆஸ்பத்திரி Home & Hotel Visit வயிறு சம்மந்தமான, ஆண்களுக்கான பிரச்சனை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ஒயில் மசாஜ் இந்தியா சிகிச்சை ஸ்பா ஆயுர்வேத மசாஜ் & ஸ்டீம் பாத் அர்சஸ் வியாதிகளுக்கும் @ மெனன்ட் லெவனியா.
பிரியா
0728 138 773
0777 204 921

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**சங்கரப்பிள்ளை துரைச்சாமி**

*(உரிமையாளர், அம்பாள் பேக்கரி ஆனைப்பந்தி)*

கடந்த (03.10.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் செய்தியறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரித்தியத்திலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

39/3, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

(39717)(17.14)



**டபிள் நந்தி கூரை ஓடுகள்**

- உயர் தரத்தில் உருவாக்கப்பட்டது
- ஒரு கூரை ஓட்டின் நிறை 2.7 கிலோ கிராம்
- நவீன தொழிநுட்பத்தில் தயாரிக்கப்பட்டது
- கூரை ஓட்டை உடைத்து சோதனை செய்தால், 100% சுடப்பட்டிருப்பதை உணரலாம்
- 10 வருடத்துக்கும் மேற்பட்ட உத்தரவாதம்
- வீடுகளுக்கு நேரில் வந்து தரம் குறைந்த கூரை ஓடுகளை விற்பவர்களிடம் ஏமாறாதீர்கள்
- இலங்கை முழுவதும் முகவர்கள் உள்ளனர்

(C/13706)

ரன்சலு கூரை ஓடு தொழிற்சாலை
0777201569,0776405622 சந்தலங்காவ



**என்னை படிக்க வைக்க அம்மா அதிகமா கஷ்டப்பட்டிருந்தாலும்...**

இப்ப அம்மாவ சந்தோஷமா வைச்சிருக்க - அவங்களுக்கு மாதம் 10,000/- ரூபா என்னால கொடுக்க முடியுது. காரணம் நிதித் துறையில எனக்கு கிடைச்ச வேலையினால...

- கவர்ச்சிகரமான மாதாந்த வருமானம்
- திறமையின் அடிப்படையில் பதவி உயர்வு மற்றும் மேலதிக அனுகூலங்கள்
- உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகள்/வெளிநாட்டு சுற்றுலா
- நிறுவனத்தால் வழங்கப்படும் ஏனைய சலுகைகள்
- இலவச பயிற்சி பாடத்திட்டம்

இலங்கையின் நிதித் துறையிலுள்ள முன்னணி நிறுவனத்துடன் இணைந்துகொள்வதற்கான ஆரம்ப படியாக இச் சந்தர்ப்பம் அமையும்.

**தகைமைகள்:**

- ஆண் அல்லது பெண் 20 - 45 வயதிட்குட்பட்டவராகவும், நட்புறவுடன் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- க.பொ.த உ/தரத்தில் 3 பாடங்களுக்கு சித்தி இருத்தல் வேண்டும். அல்லது
- க.பொ.த சா/தரத்தில் சித்தி பெற்றிருப்பதுடன், 1 வருட தொழில் அனுபவமும் காணப்படல் வேண்டும்.

PHOENIX O&M

உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி,
மனிதவள முகாமையாளர்,
இல. 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.
ஈ-மெயில்: financialjobs2014@gmail.com

முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
28•03•1933

உதிர்வு
13•11•2012

அமரர் **காசியர் சபாபதி**

திதி: அமாவாசை (03.11.2013)

எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோணப்புல வைரவர் கோயிலடி,
நெல்லிப்பழை. குடும்பத்தினர்.

(39715)(10.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
21.08.1931

விண்ணில்
06.11.2010

## அமரர் துரையப்பா பொன்னுத்துரை

திதி: அமாவாசை (03.11.2013)

மறைந்துவிட்ட உங்கள் உறவின்
நீங்காத நினைவுகளும்
உதிர்ந்துவிட்ட உங்கள் அன்பின்
உலராத வாசனையும்
பலகோடி ஆண்டுகளானாலும்
அகலாது எம்மைவிட்டு...


உள்ளமெங்கும் உம் நினைவு
கண்முன்னே உமது விம்பம்
மூன்றாண்டு காலம் கடந்தும்
கலையவில்லை எம்மைவிட்டு...
எத்தனை ஆண்டுகளானாலும்
எம் உள்ளமதில் வாழ்ந்திருப்பீர்...
மீண்டும் உங்கள் அன்பிற்கும்
அரவணைப்பிற்காகவும் ஏங்கித் தவிக்கும்.

(39714) (7.6.3)

375, பிரதான வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு தங்கராசா



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தங்கராசா 31.10.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற செல்வராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சிவலிங்கம், தங்கச்சியம்மா, ஞானம்மா மற்றும் விவேகானந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பதிவதனா (பிரான்ஸ்), தர்மவரதன் (சவுதி), சிவகரன், சியாமளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானவிக்னா (பிரான்ஸ்), நளினி, வசந்தகுமாரி, மாயவன் ஆகியோரின் அன்பு மாமனும், வினுஷா (பிரான்ஸ்), அபிநயன் (பிரான்ஸ்), வினோஜா (பிரான்ஸ்), அஷ்வினா, கஜானன், நிதுர்ஷன், சாருஜன், அக்ஷயன், அபினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு, ஏழாலை.
077 9047008

(39713)
(10,6,3)

தகவல்:
குடும்பத்தினர்.

# முல்லையில் மீன்பிடித்துறைமுகம்

முல்லைத்தீவில் மீன்பிடித்துறைமுகமொன்று அமைக்கப்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

வடமாகாணத்தில் தாய் வான் நாட்டு நிறுவனத்தால் 200 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மீன்பிடித் துறைமுகங்கள் உருவாக்கப்படவுள்ளதாக மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் ஓர் அங்கமாகவே முல்லைத்தீவிலும் துறைமுகம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான வேலைத் திட்டம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-500)

# மரண அறிவித்தல்



## திருமதி வேல்அமுதன் இராசேஸ்வரி

மூத்த எழுத்தாளரும் திருமணஆற்றுப்படுத்துநருமான குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனின் அன்பு மனைவி இராசேஸ்வரி இயற்கை எய்திவிட்டார். அன்னார் பொறியியலாளர் அ.மதிமகன், ஆசிரியர் திருமதி உ.மதினி ஆகியோரின் அன்னையும் திருமதி ம.தயாளினி, ஆசிரியர் பா.உதயகுமார் ஆகியோரின் மாமியாரும் வரிமதிப்பீட்டாளர் கு.குணநாயகம், அதிபர் கு.இராசநாயகம், அமரர் திருமதி சி.பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ம.மதிதயனன், ம.மதிதயனி, உ.சங்கீத் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03.11.2013 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப 1.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் : வேல் அமுதன்(கணவர்)
8/3/3, Metro Apartment, 55th Lane, Wellawatte,
Colombo - 06. T.P : 0112 360488,
0114 873929, 0112 360694, 0779 499087

(C/11709)

# மரண அறிவித்தல்

## திருமதி . சாவித்திரிதேவி எதிர்வீரசிங்கம்

திருமதி சாவித்திரிதேவி எதிர்வீரசிங்கம் கடந்த 04.10.2013 வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் நெவாடா மாகாண தலைநகரமாகிய காசண் நகரத்தில் காலமானார். அன்னரது இறுதிக்கிரியை நடைபெற்று காசண் நகரத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதனை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : கணவர்
54, உருத்திரா மாவத்தை,
கொழும்பு - 06
தொலைபேசி : 0112554201

(C/13394)

# மரண அறிவித்தல்



## பெரியதம்பி துரைராஜா JP

(Paints & General Industries)

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டி, சிறபறிகாடன்ஸ், 38A 1/1 இல் வசித்து வந்தவருமாகிய பெரியதம்பி துரைராஜா நேற்று (02.11.2013) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - மகாலட்சுமி தம்பதியினரின் மூத்த மருமகனும், சுந்தரலட்சுமியின் அன்புக் கணவரும், திவாகரன், சுலோசனா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேணுகா, செல்வகணேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவப்பிரியன், சிவப்பிரியா, கேஷளி, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெவ்வேந்திரன், காலஞ்சென்ற ராஜேந்திரன் மற்றும் மகேந்திரன், காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் விஜயலட்சுமி, தனலட்சுமி, சுந்தரகுமாரி, ஜெயகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜயரட்ண மலர்ச்சாலையில் இன்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலை வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் பி.ப.2.00 மணிக்கு நடைபெற்று, கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் [illegible]

[illegible] 1/1, சிறபறிகாடன்ஸ்,
கொழும்பு - 4.

(சி13708) (12.6.3)

தகவல்:
திவாகரன் (மகன்),
011 258 6799/077 244 7208

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநரை மாற்ற அரசுக்குள்ளும் ஆதரவு

## கூட்டமைப்பின் முடிவுக்கு ஆதரவு என்கிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரண

கொழும்பு, நவ. 3

வடமாகாணத்தில் சிவில் ஆளுநர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்துக்கு ஆதரவு அளிப்பதாக சம சமாஜக் கட்சியின் தலைவரும், சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண நேற்றுத் தெரிவித்தார்.

"போர் முடிந்து சமாதானமான சூழ்நிலை காணப்படுகின்ற இந்நிலையில் வடக்கில் இராணுவ ஆளுநர் ஒருவர் இருப்பது அவசியமில்லாத ஒன்றாகும்" என்றும் வடக்கில் இராணுவத் தினரால் கைப்பற்றப்பட்டுள்ள வீடுகளும், காணிகளும் உரியவர்களிடம் வழங் கப்பட வேண்டும்" என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

போர் முடிவடைந்து நான்கு வருடங்களைக் கடந்தும் வடக்கில் இராணுவ அதிகாரியொருவரே ஆளுநராகக் காணப்படுகின்றமைக்கு எதிர்ப்பைத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அங்கு சிவில் ஆளுநர் ஒருவரை நியமிக்குமாறு அரசிடம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

இதுதொடர்பாக வினவியபோதே அமைச்சர் திஸ்ஸ வித் தாரண மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இவர் மேலும் தெரிவித்ததாவது-

"வடக்கில் தற்போது யுத்தம் முடிவடைந்து மக்கள் அனைவரும் நிம்மதியுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அங்கு இராணுவ அதிகாரி யொருவர் ஆளுநராக இருக்கின்றமையானது உண்மையில் அங்குள்ள தமிழர்களின் சுதந்திரத்தை பாதிக்கின்றது என்றே கூறவேண்டும். அதுமட்டு மல்ல, வடக்கில் தற்போது இரா ணுவ அதிகாரியொருவர் ஆளுநராக இருப்பது அவசியமே இல்லாத ஒன்றாகும்.

எம்மைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டு கோளுக்கு நிச்சயமாக ஆதரவை தெரிவிப்போம். கூட்டமைப்பு கூறுவதைப் போன்று வடக்கில் ஒரு சிவில் அதி காரியொரு வரை ஆளுநராக நியமித்தால் அது அங்குள்ள தமிழர்களுக்கு நிம்மதியும், சுதந்திரத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்களின் வேண்டுகோள் நியாயமானது.

ஆனால், இந்த மாற்றம் சம்பந்தமாக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவே தீர்மானம் எடுக்க வேண்டும். அவருக்குத் தான் இவ்விடயத்தை தீர்த்து வைக்க பூரண அதிகாரம் காணப்படுகிறது.

அத்தோடு வடக்கில் அகதி முகாம்களில் வாழுகின்ற தமிழர்களை மீட்டெடுத்து அவர்களின் சொந்த வீடுகளிலேயே குடியமர்த்த வேண்டும்.

இதற்காக இராணுவத்தின் வசம் காணப்படும் தமிழர்களின் வீடுகளும், காணிகளும் மீண் டும் மக்களுக்கே கையளிக்கப் பட வேண்டும். தேசியப் பாதுகாப்புக் கருதி பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகள் சம்மந்தமாக இராணுவ உயர் பீடமே தீர்மானிக்க வேண்டும்என்றாலும்தேவைக்கதிகமாக இராணுவத்தின் வச முள்ள காணிகளை மீண்டும் உரியவர்களுக்கு கையளிப் பதே ஆரோக்கியமான விடயமாகும்." என்றார்.

## கந்த சஷ்டி உற்சவம்

நீர்வேலி கந்தசுவாமி கோயி லின் கந்தசஷ்டி உற் சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கொடி யேற்றத் துடன் ஆரம்பமாகி நடை பெறும். எதிர்வரும் 8 ஆம் திகதி சூர சங்கார உற்சவம் பிற்பகல் 3 மணிக் கும் மறுநாள் மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 10 ஆம் திகதி பிற்பகல் திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறும். (த-17)

## 140,000 ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்கள் ஒரு வாரத்தில் திருட்டு

யாழ்ப்பாணம் நவ.03

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தம ஜந்த விஜயஸ்ரீ தெரிவித்தார்.

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெல்லியடியில் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று கடந்த சனிக்கிழமை திருடப்பட்டுள்ளது. பருத்தித்துறையைச் சேர்ந்த குறித்த முறைப்பாட்டாளரின் மேலதிக தகவலுக்கு ஏற்ப உடுத்துறை மேற்கு தாளையடியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து மோட்டார் சைக்கிளை மீட்ட பொலிஸார் குறித்த சந்தேக நபரையும் கைது செய்து விளக்கமறியிலில் வைத் துள்ளனர்.

ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கில் வீடு உடைத்து 11 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் மற்றும் பெறுமதிமிக்க கைக் கடிகாரம் என்பன திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (த-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### போரை

கணேசன் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தால் இசைப்பிரியா உயிருடன் பிடிக்கப்பட்டுக்கொண்டு செல்லப்படும் காணொலியை சனல் - 4 வெளியிட்டுள்ளது. இந்தக் காணொலி தொடர்பில் கருத்துரைக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் காணொலி தொடர்பில், கண்ணை மூடிக்கொண்டு பாலைத் திருடிக் குடிக்கும் திருட்டுப் பூனைபோல் அரசு நடந்து கொள்ள முடியாது.

எடுத்த எடுப்பிலேயே இதை வெறும் நாடகம் என்று சொல்லி விடுவதை விட்டு, இதற்கு ஆதாரபூர்வமாக அரசு பதில்சொல்ல வேண்டும். இத்தகைய ஆதாரங்கள் படைத்தரப்பினரிடமிருந்து பெறப்பட்டவை என்றும் ஆதாரங்களை காணொலியை வெளியிட்ட ஊடக நிறுவனம் கூறுகின்றது. இது அடுத்த பாரதூரமான குற்றச்சாட்டு போரை நடத்திய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, இது தொடர்பாக அரசு ஆதாரபூர்வமாகப் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் பற்றிய ஆவணங்கள் இருக்கின்றன என்றும் அவற்றைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

இது பற்றிய பொறுப்புக் கூறல் இலங்கை அரசின் பிரதான கடப்பாடு என்பதை ஐ.நா. சபை ஏற்கனவே எடுத்துக் கூறிவிட்டது. இந்த நிலையில் ஆதாரங்களுடன் வரும் போர்க்குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க வேண்டிய கட்டாயமானதாகும். உலகத்தரம் வாய்ந்த ஒரு ஊடக நிறுவனத்தால், வெளியிடப்பட்டுள்ள இந்தப் புதிய காணொலிக் காட்சிகள் இந்த நாட்டிலும் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்கும் பெண்ணியப் போராளிகளுக்கும் மிகவும் உணர்வுபூர்மானதாகும்.

இது உணர்வுபூர்வமானது மாத்திரமல்ல. சர்வதேச சட்டரீதியானதும் என்பதை இந்த அரசு புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (த-5)

### சுயாதீன

பிரிட்டன் தமிழர் பேரவைக்கும், பிரிட்டன் தொழிற் கட்சித் தலைவர் எட் மில்லிபாண்ட்டுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பிலேயே மேற்படி கோரிக்கையை எட் மில்லிபாண்ட் முன்வைத்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதுடன், கடந்த காலக் குற்றங்களுக்கு இன்னமும் இலங்கை அரசு பொறுப்புக் கூறவில்லையென்பதையும் பிரிட்டன் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

'இலங்கையில் நல்லிணக்கம்' என்ற அறிக்கை ஒன்றையும் எட் மில்லிபாண்டிடம் சமர்ப்பித்துள்ளனர் பிரிட்டன் தமிழர் பேரவையினர். இந்த அறிக்கையில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள், காணி சுவீகரிப்பு குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையைப்பார்வையிட்ட மில்லிபாண்ட் அதிர்ச்சியடைந்ததாகவும் பிரிட்டன் தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது. (த-5)

### வேறுவழியைத்

உறுப்பினருமான இரா. சம்பந்தன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலி.வடக்கில் வீடழிப்பை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவிடம் தொலைபேசி மூலம் கோரியிருந்தார்.

இதற்கமைவாக வீடழிப்பை நிறுத்துமாறு ஜனாதிபதி யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் செய லாளர் லலித் வீரதுங்க சம் பந்தனுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

இதனையும் மீறி நேற்றும் வீடழிப்பு தொடர்ந்தது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

தொடர்ந்து வீடழிப்பு இடம் பெற்றால் தனக்கு உடனடியாக அறிவிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் என்னிடம் தெரிவித்தார்.

இதனடிப்படையில் இன்றும் (நேற்றும்) வீடழிப்பு நடவடிக்கைகள் தொடர்வதைத் தெரியப்படுத்த அவருடன் பலமுறை தொடர்பு கொண்டபோதும் அழைப்புக் கிடைக்கவில்லை.

நாங்கள் எமது மக்கள் சார்பாக ஜனாதிபதிக்கு வேண்டுகோளை விடுப்பதுகடமை. ஜனாதிபதியின் உத்தரவையும் மீறி அது நடந்தால் என்ன செய்வது? நாங்கள் வேறு வழியைத்தான் பார்க்க வேண்டும். நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் - என்றார். (த-5)

### மஹிந்தவின்

வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன் பின்னர் சம்பந்தனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க வலி.வடக்கு வீடழிப்பு நடவடிக்கைகளை நிறுத்துமாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவித்திருந்தார்.

இந்த உத்தரவு நேற்றுமுன்தினம் பிறப்பிக்கப்பட்டதாக ஜனாதிபதியின் செயலாளர் சம்பந்தனிடம் கூறியிருந்தார்.

எனினும் இந்த உத்தரவையும் மீறி நேற்றும் அங்கு வீடுகள் இடித்தழிக்கப்பட்டன.

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு பின்புறமாக உள்ள வறுத்தலைவிளான் பகுதியில் இராணுவத்தினர் 'புல்டோசர்' கொண்டு வீடுகளை இடித்தழித்ததை நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன்.

இந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உள்ள இராணுவ மேஜர் நிசங்க என்பவர், இந்தப் பிரதேசம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. இங்கு நாம் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியும். இங்கு நடைபெற்று வரும் வீடழிப்பு நடவடிக்கைகளை நிறுத்துமாறு எமக்கு எந்த உத்தரவும் வரவில்லை. நீங்கள் உங்களால் முடிந்ததைப் பார்த்துக் கொள்ளுங்கள். சட்ட நடவடிக்கை எடுப்பதென்றாலும் எடுங்கள் என்று தன்னிடம் கூறினார் என தவிசாளர் சுகிர்தன் 'உதயனு'க்குத் தெரிவித்தார். (த-5)

### இசைப்பிரியாவின்

களை எதிர்கொண்டே ஆக வேண்டும்" என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்.

இசைப்பிரியா இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டது கண்டிக்கத்தக்கது என்றும் அவர் கூறியுள்ளார்.

"இசைப்பிரியாவை இலங்கை இராணுவத்தினர் கொலை செய்தமை குறித்த காணொலி உண்மை என்று தெரிய வந்தால், நிச்சயமாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும்" என்று மற்றொரு மத்திய அமைச்சரான ஜெயந்தி நடராஜனும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தாமலேயே தீர்ப்பளிக்கும் அளவுக்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் த.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், இயக்குநர் சீமான் ஆகியோரும் இதனைக் கண்டித்துள்ளனர். (த-5)

### 'சனல் - 4'

வித்துள்ளார்.

போரின் இறுதிக் கட்டத்தில் இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்ட போது, இராணுவத் தளபதியாகப் பணியாற்றியவர் சரத் பொன்சேகா.

இவர் 'சனல் -4' தொலைக்காட்சி வெளியிட்ட இசைப்பிரியா குறித்த காணொலி தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

போரின் முடிவில் 12 ஆயிரம் பேர் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். அவர்களில் இந்தப் பெண்ணும் இருந்தாரா என்று எனக்குத் தெரியாது.

சரணடைந்த 12 ஆயிரம் பேர் பற்றிய ஆவணங்கள் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் இருக்க வேண்டும். கடைசியில் அவரை யாரும் பார்த்தார்களா? எப்போது பார்த்தார்கள்? இந்தப் படங்கள் எப்போது எடுக்கப்பட்டவை? போன்ற தகவல்களை ஆராய்ந்தால் தான் அது தொடர்பாக எதையும் கூறமுடியும்.

இலங்கை இராணுவம் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுப்பதாக இருந்தால் அந்த ஆவணங்களை ஆராய்ந்து பார்த்துத்தான் மறுக்க முடியும் - என்றார். (த-5)

### காணிகளை

ருந்தது. மாகாண சபைத் தேர்தல்களால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தச் செயற்பாட்டை அரசு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவின் காணி தொடர்பான பரிந்துரைகள் தொடர்பான செயலமர்வு ஒன்று அனுராதபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கின் சகல பகுதிகளிலும் உள்ள பிரதேச செயலாளர்கள், காணி அலுவலர்கள் ஆகியோருக்கே இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இதில் காணி சுவீகரிப்பு, அரச காணி பங்கீடு என்பன தொடர்பில் ஆராயப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### ஆரவாரம்

நேற்றையதினம் இந்து மக்கள் ஆலயங்களுக்கு காலையில் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

பட்டாசு வெடியோசைகள் குறைவாகவே இருந்தன. அத்துடன் நகர்ப்பகுதிகளிலும் மற்றும் வீதிகளிலும் மக்கள் ஆரவா ரத்தை காணமுடிய வில்லை.

இருப்பினும் குடிபோதையிலான மோதல்களுக்கு மட்டும் நேற்றைய தீபாவளியில் குறைவில்லை. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐங்கரன், ஜெயறூபன், மயூரி, சிறந்த வீரர்களாகத் தெரிவு

### யாழ்.பல்கலைக்கழக விருது வழங்கும் நிகழ்வில்

யாழ்ப்பாணம்,நவ.3
யாழ்.பல்கலைக்கழகத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த தடகள வீரராக கே.ஐங்கரனும், சிறந்த சகலதுறை ஆட்ட வீராங்கனையாக, விருதை பி.மயூரியும், ஆண்களுக்கான சகல துறை ஆட்ட வீரர்களாக ஜெ.ஜெயறூபன், கே.ஐங்கரன் ஆகியோரும் விருதுக்காக தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழா கடந்த வாரம் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவைத் தலைவர் கே.ஐங்கரன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்றது.

இதில் தடகளப் போட்டியில் ஆண்கள் பிரிவில் எட்டுப் பேருக்கும், பெண்கள் பிரிவில் எட்டுப் பேருக்கும் பூப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் 4 பேருக்கும், பெண்கள் பிரிவில் 4 பேருக்கும், கரம் விளையாட்டில் ஆண்கள் பிரிவில் 4 பேருக்கும், பெண்கள் பிரிவில் 4 பேருக்கும், சதுரங்க விளையாட்டில் ஆண்கள் பிரிவில் 4 பேருக்கும், பெண்கள் பிரிவில் 3 பேருக்கும் விருதுகள் வழங்கப்பட் டன.

துடுப்பாட்டத்தில் 6 பேருக்கும், எல்லே ஆண்கள் பிரிவில் 6 பேருக்கும், பெண்கள் பிரிவில் 10 பேருக்கும், உதைபந்தாட்டத்தில் 8 பேருக்கும், கொக்கி ஆண்கள் பிரிவில் 8 பேருக்கும், கராத்தேயில் 5 பேருக்கும், வலைப்பந்தாட்டத்தில் 5 பேருக்கும், மேசைப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் 2 பேருக்கும், பெண்கள் பிரிவில் 2 பேருக்கும், கரப்பந்தாட்டத்தில் 4 பேருக்கும், பளுதூக்குதலில் 2 பேருக்கும் நிற விருதுகள் வழங்கப்பட்டன.

உள்ளக விளையாட்டுகளுக்கான தனிநபர் போட்டிகளில் பூப்பந்தாட்டம் (ஆண், பெண்), கரம் (ஆண், பெண்) மேசைப்பந்தாட்டம் (ஆண், பெண்) களுக்கான ஒற்றை, இரட்டையர், கலப்பு இரட்டையர்கள் ஆகியவற்றுக்கான விருதுகளும், சதுரங்கம் (ஆண், பெண்), புதுமுகமாணவர்களில் சிறந்த வீரர்களுக்கான விருதுகளும், துடுப்பாட்டத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரர், கள வீரர், சகலதுறை வீரர்களுக்கான விருதுகளும், அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டியில் வெற்றி பெற்ற தடகள வீரர்களுக்கான விருதுகளும், உதைபந்தாட்டத்தில் 3 ஆம் இடத்தைப் பெற்ற உதைபந்தாட்ட வீரர்கள், பளுதூக்கல் போட்டியில் முதல் இடத்தைப்பெற்றுக் கொண்ட பி.கிருஸ்ண குமார், 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட ரி.இந்திரகுமார் ஆகியோருக்கான விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரெட்ணமும், யாழ். பல்கலைக்கழக விளையாட்டு ஆலோசனைச் சபைத் தலைவர், கலாநிதி பி.ஐங்கரன், யாழ்.பல்கலை உடற்கல்வி அலகின் பணிப்பாளர் கே.கணேசநாதன், பீடாதிபதிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (த-23)



அகில இலங்கை ரீதியிலான பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தேசிய அரை மரதன் ஓட்டப் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் அன்ரனி டெல்மன் பெண்களுக்கான போட்டியில் பங்கு கொண்ட டம்சிகா ஆகி யோரை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்ற அன்ரனி டெல்மனுக்கு கோட்டக்கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கம் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார். (த-23)

## யாழ். வருகிறார் சங்ககார



யாழ்ப்பாணம், நவ.3
இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் குமார் சங்ககார இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

இன்று யாழ். வரும்.அவர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வரும் முரளிக் கிண்ண 20/20 கிரிக்கெட் போட்டியில் விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-23)

## யாழ். சென்றல் அணி 9 இலக்குகளால் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.3
நியூஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தி வரும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் 2 ஆவது சுற்றில் 5 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் யாழ். சென்றல் அணி, திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 17.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுண் 31 ஓட்டங்களையும், பிரபு 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ். சென்றல் அணியைச் சார்ந்த றஜீவ்குமார் 4 இலக்குகளையும் சவிஸ்ரன் 3 இலக்குகளையும் றொகான் 2 இலக்குகளையும் யசிதரன் 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 10.5 பந்துப் பரிமாற்றங்களில் 1 இலக்கினை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றஜீவ்குமார் 40 ஓட்டங்களையும்பாலேந்திரா 27 ஓட்டங்களையும்பெற்றனர்.

திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியைச் சேர்ந்த கபில் 1 இலக்கைக் கைப்பற்றினார்.

இந்தத் தொடரில் யாழ். சென்றல் அணி 20.55 (5 போட்டிகள்) புள்ளிகளையும், திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 15.74 (6 போட்டிகள்) புள்ளிகளையும் பெற்றுள்ளன. (த)

## அரையிறுதிக்கு தகுதி பெற்ற அணிகள்

சண்டிலிப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடை யேயான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

14 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அணியும் மோதவுள்ளன. (த-422)




முரளி கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாண இணை அணிக்கும் சென். பீற்றர்ஸ் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆட்டநாயகனாகத் தெரிவான சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி வீரன் ஹஷன் உபந்திரவுக்கு யாழ். மாவட்டக் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் ஏ.எஸ்.நிஷாந்தன் விருது வழங்கு கிறார். போட்டி இணைப்பாளர்களான ரியூடர், எடின் ஆகியோர் அருகில் உள்ளனர். (த-23)

# யாழ். பல்கலை சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.3
யாழ்.பல்கலைக்கழக விளை யாட்டு அவையும் யாழ்.பல்கலைக்கழக கரம் அணியும் இணைந்து பல்க லைக்கழக பழைய மாணவி திருமதி பானு ரேகா முரளிதரனின் அனுசரணையுடன் அழைக்கப்பட்டகழகங்களுக்குஇடையே நடத்திய கரம் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.


கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி போட்டியிட்டது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியைச் சேர்ந்த எம்.அன்ரனியை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி வீரன் குகதீபன் போட்டியிட்டார். இதில் யாழ். பல்கலைக் கழக அணியைச் சேர்ந்த எம். அன்ரனி 24:04 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில்யாழ். பல்கலைக் கழக அணிவீரர் வி.தினேஸ் குமாரவை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி விளை யாட்டுக்கழக அணி வீரர் ரி.காந்தன் போட்டியிட்டார். இதில் யாழ். பல்கலைக்கழக அணி வீரர் எம்.தினேஸ் குமார் 25:04 என்ற புள்ளிகள் அடிப் ப டையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரர் எஸ்.எம்.கருணாரட்ணவை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி வீரர் எம்.சோபானந்தன் போட்டியிட்டார். இதில் ஸ்ரீகாமாட்சி அணி வீரன் எம்.சோபானந்தன் 25:15 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றார்.

முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரர்களான எம்.அன்ரனியும், எப்.ஆர்.துஸ்யந்தனும் இணைந்து ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி வீரர்களான எம்.குகதீபன், மற்றும் செந்தூரன் ஆகியோரை எதிர்த்து விளையாடினர். இதில் யாழ். பல்கலைக் கழக அணி வீரர்களான எம்.அன்ரனி, எப்.ஆர்.துஸ்யந்தன் ஆகியோர் 17:16 என்ற புள்ளிகள் பெற்று வெற்றி பெற்றனர்.



ஆட்ட முடிவில் யாழ்.பல்கலைக்கழக அணி 2 ஒற்றையர் ஆட்டத்திலும் ஓர் இரட்டையர் ஆட்டத்திலும் வெற்றி பெற்று 2013 ஆம் ஆண்டுக்கான சம்பியன் ஆனது. மூன்றாமிடத்துக்கான போட்டியில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 5 சுற்று போட்டியில் ஒரு ஒற்றையர் ஆட்டத்திலும் இரண்டு இரட்டை யர் ஆட்டத்திலும் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கெ ாண்டது. (த-23-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அத்லெட்டிகோ மட்ரிட் வெற்றி


கிரானடா அணிக்கு எதிரான லா லிகா உதைபந்தாட்ட லீக் போட்டியில் அத்லெட் டிகோ மட்ரிட் அணி வெற்றி பெற்றது.
ஸ்பெயி னில் லா லிகா உதைபந்தாட்டத் தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் கிரானடா, அத்லெட்டிகோ மட்ரிட் அணிகள் மோதின.
இதன் முதல் பாதியில் அத்லெட்டிகோ அணியின் தியாகோ (38ஆவது நிமிடம்) தண்டனை உதை வாய்ப்பைக் கோலாக்க மாற்றினார். இதற்கு கிரானடா அணியின ரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இரண்டாவது பாதியில் கிடைத்த தண்டனை உதை வாய்ப்பை அத்லெட்டிகோ அணியின் டேவிட் வில்லா (78ஆவது நிமிடம்) கோலாக மாற்றி கைகொடுத்தார்.
போட்டியின் கடைசி நேரத்தில் கிரானடா அணியின் ஓடியன் (90ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார். முடிவில், அத்லெட்டி கோ மட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இதன் மூலம், புள்ளிப்பட்டியலில் அத்தெலட் டிகோ அணி தொடர்ந்து இரண்டாவது இடத்தில் நீடிக்கிறது. முதல் இடத்தில் பார்சிலோனா அணி உள்ளது. மூன்றாவது இடத்தை ரியல் மட்ரிட் அணி தக்க வைத்துக் கொண்டது. (து)

# தென்னாபிரிக்காவை இலகுவாக வெற்றி கொண்டது பாகிஸ்தான்

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 2ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது. டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 49.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது.
4 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, பின்னர் 2 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களுடன் தொடர்ந்து. எனினும் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழக்க நேர்ந்தது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக அஹமட் ஷெஷாத் 85 பந்துகளில் 58 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ், ஷகிட் அப்ரிடி இருவரும் தலா 26 ஓட்டங்களையும் மிஸ்பா உல் ஹக் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக றயன் மக்லரன் 34 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் மோர்னி மோர்க்கல் 38 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் இம்ரான் தாஹிர், வெய்ன் பார்னெல் ஆகிய இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
210 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 40.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 66 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. 7 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, அதன் பின்னர் 2ஆவது இலக்குக் காக 36 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும், அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்து தோல்வியைத் தழுவியது.
துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக றயன் மக்லரன் 43 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும், ஜே.பி. டுமினி 45 பந்துகளில் 25 ஓட்டங்களையும், வெய்ன் பார்னெல் 22 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக ஷகிட் அப்ரிடி 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் டுக்களையும் மொஹமட் இர்பான் 53 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் சயீட் அஜ்மல் 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சொஹைல் தன்வீர் மற்றும் மொஹமட் ஹபீஸ் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (து)



# சச்சினின் தாயாருக்காக விசேட பாதை



சச்சினின் 200ஆவது டெஸ்ட் போட்டியை காண அவரது தாயாருக்கு வான்கடே மைதானத்தில் விசேட பாதை தயாராக உள்ளது. இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும், சர்வதேச அரங்கில் சதத்தில் சதம் அடித்தவருமான சச்சின் எதிர் வரும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுகிறார்.
சச்சினின் வேண்டுகோளுக்கு இணங்க வரலாற்றுச் சிறப்பு மிக்க இப்போட்டி மும்பாய் வான்கடே மைதானத்தில் நடக்கவுள்ளது. இதுவரை சச்சின் விளையாடிய சர்வதேசப் போட்டி எதையும் நேரில் பார்க்காதவர் இவரது தாயார் ரஜ்னி.
இம்முறை சச்சின் ஓய்வு பெறவுள்ளதால் வான்கடே மைதானத்துக்கு நேரில் வந்து பார்க்கவுள்ளார். வயதாகிவிட்டதால் இவரால் சக்கர நாற்காலியில் தான் வர முடியும். இதற்காக சில வாரத்துக்கு முன், ஒரு சரிவுப்பாதை அமைக்கப்பட்டது. இது அகலம் குறைவாக உள்ளதாகக் கூறி சச்சின் நிராகரித்தார். இப்போது 8 அடி நீளம், 4 அடி அகலம் கொண்ட புதிய பாதை தயாராக உள்ளது. இவருக்கு இலவச அனுமதி கொடுக்க மும்பாய் கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது. (து)



# கிளார்க்குக்குக் கண்டனம்

நடுவரின் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நடந்து கொண்டதற்காக மைக்கல் கிளார்க்குக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் அணித்தலைவராக உள்ளார் மைக்கல் கிளார்க். இவர் தற்போது நியூசவுத் வேல்ஸ் அணியின் தலைவராக விளையாடி வருகிறார். சிட்னியில் நியூசவுத் வேல்ஸ் அணிக்கும், டஸ்மேனியா அணிக்கும் இடையேயான கிரிக்கெட் ஆட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் போது, டஸ்மேனியா வீரருக்கு சந்தேகத்தின் அடிப்படையில் ஆட்டமிழப்பு வழங்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறையை சைகையில் காண்பித்தார் கிளார்க்.
இப்போட்டியில் 'ரீப்ளே' வசதி இல்லாததால், மறுபரிசீலனை முறையைப் பயன்படுத்த முடியவில்லை. எனினும், மறுபரிசீலனை செய்யும்போது உரிய வகையில் முறையிட வேண்டும். அந்த வகையில், கிளார்க் காண்பித்த சைகையானது விதிமுறையை மீறுவதாக தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கிளார்க்குக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும் அத்தோடு கிளார்க்கும் தமது தவறை ஒப்புக் கொண்டார். (து)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரு அணிகளும் சரவெடி ஆட்டம் இருந்தும் சாதித்தது இந்தியா

பெங்களூர், நவ.03

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஏழாவதும் இறுதியுமான ஒரு நாள் ஆட்டத்தில் 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்ட இந்திய அணி தொடரை 3-2 என்ற கணக்கில் கைப்பற்றி யுள்ளது.

ஏழு ஆட்டங்களைக் கொண்ட தொடரில் இரு அணிகளும் இரு ஆட்டங்களில் வெற்றி பெற்றிருந்த நிலையில் நேற்றைய இறுதி ஆட்டம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அதன்படி களமிறங்கிய இந்திய அணி ரோஹித்தின் இரட்டைச் சதத்துடன் 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 383 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ரோஹித் மற்றும் சிகர் தவான் முதலாவது இலக்குக்காக 112 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். 17 ஆவது பந்து பரிமாற்ற நிறைவில் மழை குறுக்கீடு செய்த போதும் ஆட்டம் பாதிப்பு இன்றி தொடர்ந்தது.

தவான் 60, ஹேறாக்லி 0, ரெய்னா 28, யுவராஜ் 12 என்று ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க இந்திய அணி 40 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



இறுதிப் பத்துப் பந்துப் பரிமாற்றங்களையும் டோனியும், ரோஹித்தும் இணைந்து பந்தாடினர். பந்துகள் பவுண்டரிக்கும், சிக்ஸர்களுக்குமே சென்றது. 151 ஓட்டங்கள் இறுதிப் பத்துப் பந்துப் பரிமாற்றத்தில் குவிக்கப்பட இந்திய அணி 6 இலக்குகளை இழந்து 383 ஓட்டங்களைப் பெற்றது. ரோஹித் 158 பந்துகளில் 12 பவுண்டரிகள், 16 சிக்ஸர்கள் அடங்கலாக 209 ஓட்டங்களையும், டோனி 38 பந்துகளில் 62 ஓட்டங்களையும் குவித்தனர். பந்து வீச்சில் டொஹேட் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் கடின இலக்கை விரட்டிய ஆஸி.க்கு ஆரம்பத்திலிருந்தே அதிர்ச்சிதான் மிஞ்சியது. முன் வரிசை வீரர்கள் கை கொடுக்காத நிலையில் 5 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மத்திய வரிசையில் மக்ஸ்வெல் 22 பந்துகளில் 60 ஓட்டங்களையும், வொட்ஸன் 22 பந்துகளையும் 49 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 211 ஓட்டங்களை 30.1 பந்துப் பரிமாற்றங்களில் பெற்றது ஆஸி.

அதன் பின்னர் ஜேம்ஸ் பக்னர் தனது விஸ்வரூபத்தை வெளிப்படுத்தினார். மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் பக்னரின் அதிரடியால் ஆஸி. அணி வெற்றியைப் பெற்றது போல் வென்று விடுமோ என்ற அச்சம் இந்திய அணியின் முகத்தில் கறுவியது. சரவெடியாக வெடித்த பக்னர் 57 பந்துகளில் தனது கன்னிச் சதத்தை விளாசினார். இருந்தும் அதிஷ்டம் இந்தியாவின் பக்கம் நேற்றிருந்ததால் 45.1 பந்துகளில் 326 ஓட்டங்களுடன் ஆஸி.யின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பக்னர் 73 பந்துகளில் 11 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக 110 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சமி, ஜடேஜா தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாகவும் தொடர் நாயகனாகவும் ரோஹித் தெரிவானார். (5)


**அன்பொளி கல்வியகம்**

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013**
**சித்தியடைந்த மாணவர்களுக்கான**
**பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்

**LONDON METROPOLITAN COLLEGE**
Computer Courses

| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA,VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing cs6 | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230 , 0217538395

**வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்**
வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிறி
G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும்.
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு: Type <BIT><your name> & send to 772 395 895

**காணி விற்பனைக்கு**

மாவிட்டபுரம் தச்சங்காடு வைரவர் கோயில் முன்பாக, (K.K.S வீதி மாவிட்டபுரம் கோயில் முன்பாக 200மீ தூரம் கீரிமலை வீதியில்) 23 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்குண்டு (தரகர் தேவையில்லை)

தொடர்பு: 075 208 9141 (39673) (12,3,6)

**விற்பனைக்கு**

யாழ்.கன்னாதிட்டி வீதியில் 50 அடி நீளமும் 10அடி அகலமும் கொண்ட கடைக் கட்டடம் விற்பனைக்குண்டு (சி13506) (12,3,6)

தொடர்பு: 077 030 5280

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திற்கு முன்பாக 11 அடி அகலமும் 185 அடி நீளமும் உடைய கடை வாடகைக் குண்டு. எந்தவித வியாபாரத்திற்கும் ஏற்றது.

தொடர்பு: 077 467 0284 (39697) (7,6,3)

**German Language Academy**

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் துறை சார்ந்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் புதிய வழிமுறைகளில் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு Audio, Video மூலம் மிகவும் சிறந்த முறையில் கற்பிக்கப் படுகின்றது.

* ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட டொச் மொழிப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது.

அவதானிப்பு: 29.10.2013 செவ்வாய்க்கிழமை எமது German Language Academy நிறுவனம் பற்றி பத்திரிகையில் சிறப்புச்செய்தியில் பிரசுரமாகியது குறிப்பிடத்தக்கது.

GERMAN LANGUAGE ACADEMY
No:- 23, palaly road, Jaffna.
T.P:- 0779707322

N soft Academy
Vairavar kovil Road
Vairavar Puliyang kulam.
Vavuniya.

இந் நிறுவனத்தில் ஒரே ஒரு ஆசிரியர் S. கோணேஸ்வரன் அவர்களால் மட்டுமே கற்பிக்கப்படுகின்றது. தொடர்புகொண்ட பின் நேரில் வரவும்.

**Personal & Group Classes**

for

- C Language
- C++
- C#
- Java
- PHP
- CMS
- MySQL
- asp.net
- vb.net
- JavaScript
- CSS

Contact No - 0771553144

**Study in UK**

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

நடைமுறைகள் மாறினாலும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதல் விசாக்களைப் பெற்றுக்கொடுத்திருப்பதால்
- 4 வருட Visa உத்தரவாதம்
- இலவச IELTS மற்றும் City & Guilds வகுப்புக்கள்
- முதல்தர வரிசையில் உள்ள 50 இற்கு மேற்பட்ட கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுக்கான ஆலோசனை
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் visa தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.
- உரிய ஆவணங்கள் இருப்பின் இரு மாதத்தில் பயணம்
- எம்மிடம் Visa பெற வரும் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கான வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

December/ January இற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

**Colleges**

- Yearly Payment £ 3500
- IELTS Overall : 4.5 or B1

**Universities**

- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5



UK கல்வி வாய்ப்பு & UK Visa தொடர்பாக Exponet மிக தெளிவான விளக்கங்களை தருவதுடன் உறுதியாக செயற்பட்டு Visa கிடைக்கும் வரை எனக்கு மிகவும் உதவியாக இருந்து என் வாழ்க்கைப்பாதையை மாற்றித்தந்துள்ளது. Gnanarasa Amalajelan (Jaffna)



Exponet ஐ நான் யாருக்கும் பரிந்துரை செய்வேன். ஏனெனில் எளிதாக Exponet மூலம் மிக குறுகிய காலத்தில் வெற்றிகரமாக மாணவர்கள் விசா பெற்றுக்கொள்ள முடியும். Exponet நேர்தியான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. Thillainathan Suthakan (Jaffna)

(சி/12004) (7,6,3)

HOTLINE : 011 7 555511 /14/18 021 7538395 / 021 2227230

EXPONET Overseas Consultants
379-1/2 Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-Mail: nimal@expogroup.lk
Web: www.expogroup.lk

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
**After A/L What Next ?**

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 04.11.2013 | 09.11.2013 | 11.11.2013 | 16.11.2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hotlines:0777585913,0777222422,0714299935,0777730074


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.